Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 பாலம் 01 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 01, 2007



நெஞ்சை அள்ளும் தஞ்சைப் பெரியகோயில் 09



விளம்பரம் வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்

# சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டார்

மூன்று தசாப்தங்களாக ஈராக்கை ஆட்சி செய்துவந்த தலைவரின் கதை அடக்கப்பட்டு விட்டது.

சூரியன் தனது சிவப்பு கதிர்களை பரப்பிக்கொண்டு இருந்த வேளையில் பாக்தாத் நகரில் மட்டும் இந்த கதிர்கள் தங்கள் பரிணாமத்தை காட்ட மறுத்தன. சூரிய உதயத்திற்கு சற்று முன்பாக மார்கழி 30, 2006 அன்று முன்னாள் அதிபரும் இந்நாள் அமெரிக்க நாட்டின் சிறைக்கைதியுமான சதாம் ஹுசைன் முகம்மூடப்படாத நிலையில் தூக்கிலிடப்பட்ட செய்தி அமெரிக்க சார்பான தொலைக்காட்சியில் முதன்முதலாக அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தியை ஷியா (Shia) முஸ்லிம்களும், கேர்டிஷ் (Kurdis) மக்களும் நடனமாடி மகிழ்ச்சியைத் தெரிவித்த போதும் சுனி (Sunni) முஸ்லிம்கள் தமது தலைவரின் எதிர்பாராத முடிவை எண்ணி சோகத்துடன் இருப்பதுடன் ஒருவித பழி உணர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

1937ஆம் ஆண்டு ஏப்ரல்? 28ஆம்?திகதி ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலிருந்து 260 கிலோமீற்றர் வடக்குப்பக்கமாக ரிக்றிற் (Tikrit) என்ற சிறிய கிராமத்தில் ரிக்றிஸ் (Tigris) நதிக்கரையோரத்தில் சதாம் பிறந்தார். தனது 20ஆவது வயதில் பாத் (Baath) கட்சியில் தன்னை இணைத்து கொண்ட இவர் 1958ஆம் தனது Brother in Law ஐக் கொலை செய்த குற்றத்திற்காக 6 மாதம் சிறைத்தண்டனையை அனுபவித்தார். 1959 ஆம் ஆண்டு அன்றைய ஈராக்கிய ஜனாதிபதியான Abdel Karlem Kassem ஐ கொலை செய்ய எத்தனித்து, அதில் தோல்வியடைந்து சிரியாவிற்கு தப்பியோடினார். எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்று அன்றே தனது பாதையை தெரிவு செய்யத்தொடங்கி விட்டார்.

அங்கிருந்து எகிப்திற்கு சென்று கெய்ரோவில் தனது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# இலங்கை இனப்பிரச்சினைக்கான புதிய தீர்வுத் திட்டம்!

Dr. நிர்மலா சந்திரகாசன் - கொழும்பு பல்கலைக்கழகத்தின் acting Dean ஆக 1983ல் இருந்தவர். தமிழ் மக்களுக்காக சாத்வீக வழியில் போராடி "இரும்பு மனிதர்" என தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அழைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினரான Dr. E.M. நாகநாதனின் மகளான இவர், ஈழத் தமிழர்களின் தந்தையான எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் மகனை மணந்து, தந்தையின் அன்புக்குரிய மருமகளானார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தரவுக்கு இணங்க, Dr. நிர்மலா சந்திரகாசன் உட்பட 17 பேர் கொண்ட குழு இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு திட்டத்தை வரைந்துள்ளது. இம்மாதம் இந்த தீர்வுத்திட்டம் இலங்கையின் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இவர்கள் வரைந்துள்ள தீர்வுத்திட்டம் தமிழர்களின் வரலாற்றில் இதுவரை கிடைக்காத தீர்வாகும் என்று சிலாகிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த தீர்வுத்திட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளை திருப்தி செய்யுமா? என்பது முக்கிய கேள்வியாக உள்ளது. அதை விட முக்கிய விடயம், இந்தத் தீர்வுத் திட்டத்தை சிங்கள கட்சிகள் ஏற்றுக் கொள்ளுமா என்பதாகும்.

இந்த தீர்வுத் திட்டத்தில் ஒற்றை ஆட்சி என்பது அடித்தொழிக்கப்பட்டுள்ளது. இலங்கை என்பது சமஷ்டிக் குடியரசு என்று கூறப்பட்டுள்ளது. அதை மாநில சுயாட்சியை உள்ளடக்கிய அரசு என்று கூறலாம். அரச அதிகாரம் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகின்றது.

சிறீமாவோ ஆட்சியில் (1972) இலங்கை குடியரசு ஆனபோது எந்த உரிமையை சிறுபான்மை மக்கள் இழந்தார்களோ அந்த உரிமையை மீளத் தரவேண்டும் என்று இந்தக் குழு மீண்டும் பரிந்துரை செய்துள்ளது. (The Constitution will have a comprehensive Bill of Rights. Group rights will be recognized. Section 29(2) of the Soulbury Constitution will be included. )



அதன்படி சிறுபான்மையினரின் மொழி, சமய உரிமைகளை இலங்கையின் பெரும்பான்மையினரின் அரசு மாற்ற முடியாது என்று இந்தக் குழு கூறியுள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை அமைக்கப்படவேண்டும் என்று இந்தக் குழு சிபாரிசு செய்துள்ளது. அந்த மாகாண அரசுக்கு தனது நிலத்தில் முழு அதிகாரமும் இருக்கும். (குடியேற்றம் உட்பட).

மாகாண அரசுக்கு சொந்தமான பொலீஸ்படை உருவாக்கப்படும்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
2011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
KG Master
By Appointment only
Office: 416.291.2611/Mobile: 416.725.5112

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றும் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"
HomeLife GTA Realty Inc., Brokerage*
Ravi R. Raveendran
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto

RAJ A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1ST PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd., Scarborough, ON.

வாழ்வு - வியாபாரம் - முதலீடு
HomeLife GTA Realty Inc., Brokerage*
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd. Suite #206, Toronto

# நீண்டகாலம் வாழும் கனடியன்

100 வயதைத் தாண்டி வாழும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது உலகறிந்த உண்மை. 110 வயதைத் தாண்டி உலகில் 78 மக்கள் வாழ்ந்தாகக் கணக்கிடப்பட்டுள்ளது. (110 வயதிற்கு கூடுதலாக வாழ்பவர்கள் "Super Centenarians" என அழைப்பது வழக்கம்.)

ஆண்களின் வாழ்வின் காலம், பொதுவாக பெண்களின் வாழ்வின் காலத்தை விடக் குறைவாகவே காணப்படுகின்றது. அண்மையில் வெளிவந்த அறிக்கைகளின் படி, ஆண்களின் சராசரி வாழ்ந்த காலம் 77.8 வருடங்களாகவும், பெண்களின் வாழ்ந்தகாலம் 82.6 ஆகவும் காணப்பட்ட போதும், இருபாலாரிற்கும் இடைப்பட்ட இடைவெளி அருகி வருவதையும் அறிக்கை வெளிக் கொண்டுவந்துள்ளது. உலகில் இரண்டாவது அதிகூடிய வயதுடன் வாழுபவர், கனடாவில் மொன்றியலில் இருக்கின்றார். ஒருகிழமைக்கு முன்பாக அதிகூடிய வயதுடன் (116 வயது) வாழ்ந்த அமெரிக்கரான Elizabeth Bolden காலம் சென்றதால், 115 வயதுடைய Julie Winnefred Bertrawd என்பவர் உலகில் வயதில் இரண்டாவது அதிகூடியவர் என்ற பட்டத்துடன் இருக்கின்றார்.

இவர் செப்ரெம்பர் 16, 1891 இல் COATICOOK, QUEBEC இல் பிறந்தார். ஆனால், உலகின் முதல் வயதான குடிமகன் என்ற பட்டத்தை Aug. 21, 1891 இல் Purto Rico இல் பிறந்த Emmilligno Mercardo Del Toro பெறுகிறார். இவரிற்கும் கனடியன் Julie Bertrand இடைப்பட்ட வயதுவித்தியாசம் 26 நாட்கள் மட்டுமே. உலகின் அதிகூடிய வாழ்ந்தவராக பதிவில் இருப்பவர், Jeanne Louise Calment என்பவராவர். இவர் உலகில் 122 வருடங்கள் வாழ்ந்துள்ளார். 1977ம் ஆண்டு பிரான்ஸ் இல் இறந்துள்ளார்.

அண்மையில் அல்பேட்டாவின் வயது முதிர்ந்தவர் வொங் பிங் மா காலமானார்.

### அல்பேட்டாவின் வயது முதிர்ந்தவர் காலமானார்.

அல்பேட்டா மாகாணத்தின் வயது முதிர்ந்த பெண்மணியாக வொங் பிங் மா (Fong Ping Mah) தனது 110 ஆவது வயதில் இந்த ஆண்டு யூன் மாதத்தில் காலமானார். இவர் இறக்கும் போது இவரது பேரப்பிள்ளைகளுக்கு 17 பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள்.

மிகவும் நாகரிமான பெண்ணாக வாழ்ந்த இவர் வாரம் தோறும் முகம் மற்றும் நகங்கள் அலங்காரம் (Pedicures) செய்யும் நிலையத்தில் தன்னை அலங்கரிக்க தவறாதவர். இவர் வீட்டை விட்டு முக அலங்காரம் (Lip stick) செய்யாது வெளிக்கிட்டதே கிடையாதாம்.

இவரது வாழ்க்கை 1800களின் பிற்பகுதியில் சீனாவிலுள்ள மூங்கில் குடிசையில் ஆரம்பித்தது. இவர் சீனாவின் தென் மாகாணமாக குவாங்ரங் (Kwantung) இல் 1895 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 28ஆம் திகதி பிறந்தார். 1220 இல் லிப் கார் மா (Lip Gar Mah) என்பவரை மணந்தார். இவரது கணவர் கனடிய அரசால் விதிக்கப்பட்ட $500 தலைவரியை கட்டி எட்மென்ரன் நகருக்கு கூலிவேலை செய்வதற்காக 1910 ஆம் ஆண்டில் வந்திருந்தார்.

அடிக்கடி சீனா சென்று வந்த லிப் கார் மாவிற்கும் அங்கேயே வசித்து வந்த வொங் பிங்மாவிற்கும் இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு வளர்ப்பு மகனும் இருந்தார்கள். இவர்களது முதலாவது பெண்குழந்தை 1923 இல் பிறந்தது. அந்தக்காலத்தில் வைக்கோலால் வேயப்பட்ட குடிசைகள் மட்டுமே இருந்த ஊரில் கல் வீட்டை கட்டி மிகவும் பணக்காரர்களாக இவர்கள் வசித்து வந்தனர்.

அப்போதைய கனடிய அரசாங்க விதிகள் வொங் பிங்கை அவருடைய கணவருடன் கனடாவில் வாழ இடங்கொடுக்கவில்லை. 1949 இல் கம்யூனிஸ்டுகள் சீனாவை புரட்சி மூலம் பிடித்தபோது பணக்காரர்களான மா குடும்பத்தை முதலாளித்துவ வர்க்கமாக கருதி அவர்களது வீட்டை அரசுடமையாக்கியது. அப்போது 100 பட்டு ஆடைகளை இலஞ்சமாக கொடுத்து இவர்கள் குடும்பம் கொங்கொங் இற்கு தப்பி ஓடியது.

19 வருடங்களாக கணவனை காணாத வொங் பிங் 1958 இல் கனடாவிற்கு வந்து தனது கணவனுடன் எட்மென்ரனில் இணைந்தார். அன்றிலிருந்து கணவனுடன் எட்மென்ரனில் இல்வாழ்க்கையை நடத்தினார். இவரது கணவன் 1985 இல் இறந்தார். அதன் பின்னர் 100 வயது வரை தனது வீட்டில் வசித்த வொங் பிங் தனது இறுதிக்காலத்தில் எட்மென்ரனிலுள்ள ஒரு முதியோர் பராமரிப்பு இல்லத்தில் வசித்து வந்தார். 100 வயதைத் தாண்டி வாழும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும் மக்களின் பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே போகின்றது. பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே போனாலும் சனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகின்றது.

## உலக சனத்தொகை ஒரு நோக்கு

### உலக சனத்தொகையின் வளர்ச்சி

1804ஆம் ஆண்டு நூறுகோடி மக்கள் (1 பில்லியன்) இருந்தார்கள்.
1927ஆம் ஆண்டு இருநூறுகோடி மக்கள் (2 பில்லியன்) இருந்தார்கள்.
1960ஆம் ஆண்டு முன்னூறுகோடி மக்கள் (3 பில்லியன்) இருந்தார்கள்.
1974ஆம் ஆண்டு நானூறுகோடி மக்கள் (4 பில்லியன்) இருந்தார்கள்.
1987ஆம் ஆண்டு ஐந்நூறுகோடி மக்கள் (5 பில்லியன்) இருந்தார்கள்.
1999ஆம் ஆண்டு அறுநூறுகோடி மக்கள் (6 பில்லியன்) இருந்தார்கள்.
2013ஆம் ஆண்டு எழுநூறுகோடி மக்கள் (7 பில்லியன்) இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
2028ஆம் ஆண்டு எண்ணூறுகோடி மக்கள் (8 பில்லியன்) இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
2050ஆம் ஆண்டு தொளாயிரம் கோடி மக்கள் (9 பில்லியன்) இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- உலகில் இதுவரை காலமும் பிறந்தவர்களில் பத்தில் ஒருவரே தற்போது உயிருடன் இருக்கிறார்கள்.

- உலக சனத்தொகை வளர்ச்சி தற்போது ஒவ்வொரு செக்கனுக்கும் மூன்றுபேர்களால் கூடுகிறது.

- உலக சனத்தொகை 1960 இல் இருந்ததை விட 2000 ஆம் ஆண்டில் இருமடங்காகியது. அது 2050 இல் மூன்று மடங்கு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஒவ்வொரு வருடமும் சனத்தொகை எட்டுகோடியால் (80 மில்லியன்) அதிகரிக்க வேறு 27ஆயிரம் வகை உயிரினங்கள் (விலங்கு அல்லது தாவரம்) பூமியிலிருந்து அழிந்து கொண்டு போகின்றது.

- ஒவ்வொரு பெண்ணிற்கும் ஆறு குழந்தைகள் என 1900 ஆண்டில் இருந்த பிறப்பு விகிதம் ஐந்து குழந்தைகளாக 1950 இல் குறைந்து மூன்று குழந்தைகளாக 2000 இற்கு வந்தது.

- பிறப்பு வீதம் தொடர்ந்தும் குறைந்து கொண்டு போகும் என எதிர்பார்த்தே 2050 இல் சனத்தொகை ஒன்பதாயிரம் கோடி (9 பில்லியன்) என கணக்கிடப்பட்டது. இப்பிறப்பு வீதம் மாறாது தற்போதைய வீதத்தில் இருக்குமேயானால் 2050 இல் சனத்தொகை 10 ஆயிரத்து முந்நூறு கோடியாக (13 பில்லியன்) ஆக வந்துவிடும்.

- உலக சனத்தொகை அதிகரிக்கும் வீதம் ஒவ்வொரு வருடமும் கூடிக்கொண்டு வந்து 1989 இல் வருட அதிகரிப்பு ஒன்பது கோடியாக (90 மில்லியன்) இருந்து அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் குறைந்து கொண்டு செல்கிறது. தற்போதைய வருட அதிகரிப்பு எட்டுகோடிக்கு (80 மில்லியன்) சிறிது குறைவாகும்.

- உலகில் 15 கோடிக்கு (150 மில்லியன்) மேற்பட்ட தம்பதிகள் பிள்ளையற்றவர்களாக இருக்கிறார்கள்.

சென்னையின் சனத்தொகை பற்றி சில குறிப்பு -

- 2000 ஆம் ஆண்டில் சென்னை நகரத்தின் (City) சனத்தொகை 42 இலட்சம்.

- 2000 ஆம் ஆண்டில் சென்னை மாநகரத்தின் (Metropolitian) சனத்தொகை 67 இலட்சம்.

- 2005 ஆம் ஆண்டில் சென்னை மாநகரத்தின் (Metropolitian) சனத்தொகை 74 இலடசம்.

- சென்னை நகரில் ஒரு சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பில் 24,418 பேர் வசிக்கிறார்கள்.

- சென்னை நகரில் ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கும் 948 பெண்கள் இருக்கிறார்கள்.

- சென்னை நகரின் படிப்பறிவுள்ளவர்கள் (Litercey) தொகை 80சதவீதம் ஆகும்.

- இந்தியா முழுவதிலும் படிப்பறிவுள்ளவர்களின் தொகை 60வீதம் ஆகும்.

- சென்னையில் தமிழ் பேசப்பட்டாலும் ஆங்கிலமே பாடசாலைகளில் படிப்பிக்கும் மொழியாகவும் வியாபார நிலையங்களில் உபயோகிக்கும் மொழியாகவுமுள்ளது.

# இலங்கை இனப்பிரச்சினைக்கான...

01ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த மாகாண அரசுக்கு வெளிநாட்டு நிதி தொடர்பாக வரையறைக் குட்பட்ட அதிகாரமும் வழங்கப்படும்.

தமிழும் சிங்களமும் இலங்கை முழுவதுக்குமான அரசு மொழி என்றும், இலங்கையில் ஜனாதிபதியின் கீழ் இரண்டு உப ஜனாதிபதிகள் இருப்பார்கள், இவர்கள் மூவருமே மூன்று இனத்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் இந்தக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் உப ஜனாதிபதியாக தமிழர் ஒருவரும், முஸ்லீம் ஒருவரும் இருக்கவேண்டும்.

இதனை விட பாராளுமன்றத்திற்கு மேலாக ஒரு செனற்சபை அமைக்கப்பட வேண்டும். இந்த செனற் சபை உறுப்பினர்கள் மாகாண சபையில் இருந்தே தெரிவு செய்யப்படவேண்டும். இந்த செனற் சபைக்கு தலைவராக உப ஜனாதிபதி ஒருவரே இருக்க வேண்டும் என்றும் இந்தக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அதே சமயம் மலையகத் தமிழருக்கும் ஒரு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்றும், வடக்கு கிழக்குக்குள் முஸ்லீம் மக்களின் சுயாட்சி தொடர்பாகவும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்களின் விபரம்:

Members of the Experts Panel

1. Dr. Nirmala Chandrahasan
2. Dr. Shivaji Felix
3. Deshamanya R.K.W.Gunasekera
4. Mr. Asoka Gunewardene
5. Mr. Faisz Musthapha PC (President's Counsel)
6. Dr. Rohan Perera PC
7. Mrs. Therese Perera PC
8. Mr. N. Selvakumaran
9. Dr. K.Vigneswaran,
10. Dr. Jayampathy Wickramaratne PC
11. Mrs. Malkanthi S.Wickramasinghe
12. Deshamanya M.D.Dharmasiri Pieris
13. Deshamanya K.H.J.Wijayadasa
14. Mr. Gomin Dayasiri
15. Deshamanya H.L.de Silva PC
16. Mr. Manohara de Silva PC
17. Prof. Gerald H. Peiris

விளம்பரம்

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# 'சாஹித்திய இரத்தினம்' தி.ச.வரதராசன்

"நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என ஆழமாகச் சிந்தித்துச் சொல்லியிருக்கிறார்களே. நீண்டகாலம் வாழ்ந்து விட்டால் மட்டும் அது நிலையான வாழ்க்கையாகி விடுமா? கொஞ்சமாவது பெயரும் புகழும் மதிப்பும் சேமிச்சு வைத்திருக்கிறேன்"

இவ்வாறு சொன்னவர் இன்று 82 வயதிலே அமரத்துவம் அடைந்துவிட்ட திரு. தி. ச. வரதராசன் அவர்கள்.

அச்சக முகாமையாளர், 'வரதர் வெளியீடு' எனும் நூல் வெளியீட்டாளர், எழுத்தாளர் எனும் முப்பெரும் தொழில்களைச் செய்ததன் மூலம் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த ஒருபண்பாளர். எல்லாத்துறைகளிலும் அனுபவம் பெற்று இறக்கும் வரை ஒரு புதுமை விரும்பியாக வாழ்ந்தவர்.

முதலில் எமது சிறு அனுபவங்களோடு தொடர வேண்டியுள்ளது. எமது பாடசாலை நாட்கள் வீரகேசரி, தினகரன், ஈழகேசரி, இந்திய சஞ்சிகைகள், ஆங்கில செம்மொழி நாவல்கள் என்பவற்றின் வாசிப்போடு முடிந்தது. சிறுகதைகளை வாசித்தாலும் அது யார் எழுதினார்கள் என்பன பற்றிய சிரத்தையே இல்லை. ஏனெனில் கிராமப்புறங்களில் இதுபற்றி உரையாடவோ, ஆராயவோ, வழிப்படுத்தவோ நாற்பதுகளில் யாரும் இல்லை. நகர்ப்புறங்களில் நூல்கள் கிடைக்கவும் கலந்துரையாடக்களில் கலந்து கொள்ளவும் சந்தர்ப்பங்கள் நிறைய இருந்தன. அதனால் இலங்கை எழுத்தாளர்கள் யாரையுமே அப்போது தெரிந்திருக்கவில்லை.

வெளியுலகில் காலடி எடுத்து வைக்கும் போதுதான் சில வெளிவட்டத்துள் புகுந்து, அதன்பின் நல்ல அனுபவமும் பல்வகை வாசிப்பு வேகமும் கூடின. முதலில் அறிமுகமான எழுத்தாளர் க. சச்சிதானந்தன் (உறவினர்), பின் வேந்தனார், புதுமைப்பிரியை, சமசமாஜக்கட்சி உதயணன், தமிழரசுப் புதுமை லோலன் என்போரே.

1955இல் ஆசிரியத்தொழில் பார்த்துக்கொண்டே தமிழில் ஆழ்ந்த புலமை பெறவேண்டும் என்பதற்காக பிரத்தியேகமாக இலக்கணம் இலக்கியம் கற்க வாரவிடுமுறையில் யாழ்.நாவலர் பாட-சாலைக்கு வருவதுண்டு. அப்போது ஒருநாள் புதுமை லோலன் எம்மை சந்தித்து, 'ஆனந்தன்' எனும் சஞ்சிகை ஒன்று நடத்துவதாகவும், பெண்களைப் பங்கு பற்றச் செய்ய வேண்டும் என்பதற்காக பெண்கள் பகுதியை எம்மை ஏற்றுச் செய்யுமாறு கேட்டார். சம்மதம் தெரிவித்ததும் "பஸ் நிலைத்துக்குப் போகிற வழியில் தான் 'ஆனந்தா' அச்சகம் இருக்கிறது 'வரதரை'ச் சந்திப்போம் எனக் கூறி வரதருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

ஒரு புன்சிரிப்புடன் வரவேற்று உங்கள் பரிசு பெற்ற கதை என்னிடமும் வந்தது. இன்றுதான் சந்திக்கிறேன். தொடர்ந்து எழுதுங்கள். பெண்களும் பந்தாடத்தான் வேண்டும் என்ற தலைப்பில் ஒரு விவாதக்கட்டுரையை ஆரம்பித்து வைக்கமுடியுமா? என்று கேட்கவும் சரியெனச் சம்மதம் தெரிவித்தேன். மேசையில் ஓர் அழகான குழந்தையின் போட்டோ இருந்தது. அதிலேயே என் கண் அடிக்கடி போனதைக் கண்டுபோலும் "இவள் தான் என் மகள் செந்தாமரை" என்றார்.

முதல்நாளே அறிமுகம் செய்யப்பட்ட அந்த செந்தாமரையே இன்று அப்பாவின் துயரச் செய்தியை எமக்கு அறிவிக்கிறார் என்றால் இதுதான் விதியோ?

82 வயதைப் பூர்த்திசெய்த வரதர், அன்று சாதாரண ஆண்களைவிட சிறிது வேறுபட்டவராக கொஞ்சம் நாகரிகம் பண்பாடு உடையவராகக் காணப்பட்டார். அதிகம் அலட்டிக் கொள்ளாதவராக மௌனமாகச் சூழலை அவதானிப்பவராக எவரையும் எடைபோடுபவராக இருந்தமையால், சகலருடனும் கலகலப்பாகப் பேசிச் சிரிக்கும் எனக்கு அவரிடம் ஒருவித மதிப்பும் மரியாதையும் தோன்றிவிட்டது. அவருடைய பார்வையில் ஒரு நட்புத் தெரியுதோ என்று பார்த்தால் ஒரு தகப்பன் குழந்தையைப் பார்ப்பது போன்றுதான் இருக்கிறது. அதனால் சிறிது பயம் கலந்த மரியாதை எமக்கு. அவர் ஒருபோதும் உரத்துக் கதைத்து நான் கேட்டதில்லை.

அவருடைய தோற்றத்தில் கூட



அதாவது உடையில் மற்றவர்களின் வேட்டி நாஷனல் போல் இருக்காது. அரைக்கை புஷ் ஷேர்ட் போடுவார். வேட்டியில் கூட ஏதோ ஒரு துணி அது நாலு முழமோ எதுவோ சாரம் உடுத்தது போல் இருக்கும் தலைமுடி கூட ஒரு சிறு Hood அடித்து அதாவது நெற்றியிலிருந்து கெம்பி, பின் நெளிந்து போகும் வண்ணம் வாரப்பட்டிருக்கும். தோற்றத்தில் ஒரு தனிப்பட்ட ஆளுமை, நிதானமும் தீர்க்கமுமான பேச்சு, இவை கௌரவம் கொடுக்கப்பட வேண்டியவர் எனும் எண்ணத்தை உருவாக்கும். அந்தப் பெரிய மூக்குக் கண்ணாடி அதனை மேலும் வலுப்படுத்தும். ஆனந்தா அச்சகத்துக்கு அடிக்கடி போய்வருவதால் மஹாகவி உட்பட வேறும் பல எழுத்தாளர்களின் அறிமுகமும் கிடைத்தது. அந்நாட்களில் தமது குழந்தைப் பேற்றிற்காக அவரது மனைவி மலேசியாவுக்குத் தன் பெற்றோரிடம் போவது வழக்கம். தேன்மொழி பிறந்ததும் "தேன்மொழி" எனும் கவிதைச் சஞ்சிகை ஒன்றை மஹாகவியையும் ஆசிரியராகக் கொண்டு தொடங்கினார்.

குழந்தைக்கும் 'தேன்மொழிப் பத்திரிகைக்கும் சேர்த்த வாழ்த்தாக இருபொருள்பட ஒரு கவிதை எழுதினோம். தேன்மொழியில் பிரசுரமாய அக்கவிதை முதலிருவரிகளும் ஞாபகத்திலுள்ளன.

தேன்மொழி எந்தன் திருவே
செழுந்தமிழ் நாட்டின் பயனே....... எனவரும்.

எமது திருமணத்தின் போது 'வரதர்' அவர்களும் வருகை தந்து எங்களை வாழ்த்தி 'மணக்குடவர் உரையுடன் கூடிய திருக்குறளைப்' பரிசளித்துச் சென்றார். தொடர்ந்தும் குடும்ப நட்பாக விளங்கிய தொடர்பு அறுபதாம் ஆண்டுகளின் பின், எமது குடும்பப்பொறுப்புகள், கல்லூரிப் பொறுப்புகள், சமூகத்தொடர்புகள் எமது கல்வி முன்னேற்றம் எனபவற்றால் இழுபட்டு எழுத்துத்துறையின் ஈடுபாடு குறைந்தது. சொற்பொழிவுகள் மட்டுமே நிலைத்தது. பன்முகச் செயற்பாடுகள், சேவைகளை அதிகமாக்கியதே தவிர, தன்முனைப்பு குறைந்துவிட்டது. ஆயினும் 'வரதர்' தமது வெளியீடுகள் பற்றி அறிவிப்பார். தவிர்க்கமுடியாது நாம் போகத்தவறினால் யார் மூலமாவது நூல்களை அனுப்பிவைப்பார்.

வரதர் அவர்கள் ஒரு தசாப்தம் முந்தியவராகயிருந்தாலும் அவருடைய இலக்கியத்தொடர்பு மேலும் பலகாலம் முன்னோக்கியதாக இருந்தது. இலக்கிய உலகை நன்கு புரிந்துகொண்ட அவர் 16 வயதிலேயே எழுதிய சிறுகதை ஈழகேசரியில் பிரசுரமாகியது. தொடர்ந்து சமூக ஊழல்களைப் புட்டுக்காட்டும் வண்ணம் கதைகள் எழுதியுள்ளன. சமூகப்பிரக்ஞை உடையவர் களுக்கு எழுத்து என்பது இலகுவானது. தன் தேடல்களை ஆற்றுப்படுத்தவும் வழிவகை அறிந்தவர்.

1940 இல் எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து ஒரு சங்கம் அமைக்கவேண்டும் என்ற நிலையில் பலரின் ஒத்துழைப்போடும் தோன்றியது 'மறுமலர்ச்சிச் சங்கம்'. இவரிலும் வயது கூடியவர் பலர் இருந்த போதும் 19 வயதேயான வரதருக்கு மறுமலர்ச்சி எனும் சஞ்சிகையின் பொறுப்பு வழங்கப்பட்டது. 1943இல் இவருடைய ஓவியத்திறமையையும் கொண்டு கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த 'மறுமலர்ச்சி' 1946 இலிருந்து அச்சுப்பத்திரிகை யாக வெளிவந்தது. 1948 ஆம் ஆண்டிலிருந்து ச.வே. பஞ்சாட்சரம் அவர்களும் இணையாசிரியர் ஆனார்.

1940 களிலேயே நாவலரைப்பற்றி "நாவலர்கோன்" எனும் நூலொன்றை வெளியிட்டவர். சிறுகதைகளோடு, பாரதியார் அடியொற்றிப் புதுக்கவிதைப் போக்கில் கவிதைகளும் எழுதியுள்ளார். மறுமலர்ச்சி குறுநாவல், கட்டுரை, நாவல் எனப் பல துறைகளிலும் எழுத்தாற்றலை வெளிக்கொணர்ந்தார். 1950 இல் ஓர் அச்சக முகாமையாளராக வந்ததும் வேறும் பல துறைகளிலும் ஈடுபட்டார். 1953இல் 'ஆனந்தன்' எனும் இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்தார். புதுமை லோலன் இணையாசிரியரானார். 1955இல் தேன்மொழி எனும் கவிதைச் சஞ்சிகையினை மகாகவியை இணை யாசிரியராகக் கொண்டு தொடக்கி வைத்தார். சிறிது காலத்தில் இவை நின்றுபோக வெள்ளி எனுமொரு சஞ்சிகை வெளியானது. அதுவும் இரு வருடங்களுள் நின்று போக 1961ஆம் ஆண்டு 'புதினம்' வார இதழாக வெளிவந்தது.

'அறிவுக்களஞ்சியம்' எனும் சஞ்சிகை பொது அறிவு, கல்வி, பொது விழிப்புணர்ச்சி என்பன அடங்கியதாக 1992 ஆண்டில் செங்கையாழியானை இணையாசிரியராகக் கொண்டு சிறிது காலம் வெளிவந்தாக அறிகிறோம்.

சிறுகதைத் தொகுப்பு, கட்டுரைகள், குறுநாவல் எனவும் பல புதிய கோணங்களில் தமது படைப்புகளை முயற்சிசெய்துள்ளார். இதில் 'வரதரின் பல் குறிப்பு' எனும் பெயரில் (Directory) ஒன்றை 1964 இல் வெளியிட்டு தமிழ்மொழிக்குப் புதிய தொருதுறையை அறிமுகம் செய்துவைத்தார். 1971வரை பல பதிப்புகள் வெளிவந்தன. ஆங்கில வழிகாட்டி களை அடியொற்றித் தமிழில் முதலாவதாக வந்த 'வழிகாட்டி' இதுவே. இவற்றோடு 50 வரையிலான பிறருடைய நூல்களையும் 'வரதர் வெளியீடு' ஆக வரச்செய்தார்.

உண்மையாகப் போற்றப்பட வேண்டிய விடயம் ஒன்று உண்டு. மிகச் சிறிய வயதிலே இவர் பெண்கள் விடுதலை என்பதை உணர்ந்து புத்திபூர்வமாக கட்டுரைகளிலும் கதைகளிலும் புகுத்தியுள்ளார். பெண்களே எழுதத் துணியாத காலகட்டம். ஆண்களோ வெருண்டும், வெகுண்டும், ஸ்திரீதர்மத்துக்கு மாறானது என ஒதுக்கியும் வைத்த ஒரு விடயத்தைப் புட்டுப்புட்டு எழுத்தில் வடித்தவர் வரதர். 'பழமையோ - புதுமையோ என்பதற்காக எக்கருத்தையும் ஏற்றுக்கொள்வது முட்டாள்தனம். ஆயினும் அவற்றை சீர்தூக்கப் பார்ப்பேன், அலசி ஆராய்வேன், எமது சூழலுக்கும் பண்பாட்டுக்கும் ஏற்றதாயிருந்தால் வரவேற்பேன். சிலவற்றைக் கண்டிப்பேன். சில எம் கருத்துக்கு ஒவ்வாததெனினும் அது பாரதி, வள்ளுவர் போன்றோரால் சொல்லப்பட்டிருந் தால் பெரிதாகக் கூப்பாடு போடாமல் விட்டுவிடுவேன்" என்பார்.

புராணங்கள், இதிகாசங்களில் வரும் கற்பு பற்றிய எண்ணக்கருக்களுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார். கௌதம முனிவரை - பரசுராமரை - இராமரை - நளாயினியின் கணவ-னான முனிவரை கேள்விமேல் கேள்வி கேட்கிறார். பலாத்காரமாகப் பாலியல் வல்லுறவுக்குட்பட்டவளை கற்பிழந்தவள் எனத்தள்ளி வைத்தல் அநியாயம் போன்றவற்றை 'கற்பு' போன்ற சிறுகதைகளாக வெளியிட்டார். இது பல பேரின் நாவில் பாராட்டாயும் கண்டனமாயும் வெளிப்பட்டது.

கற்பு தமிழர்களால் ஆண், பெண் இருவருக்குமாக வைக்கப்பட்டது. 'எப்படி யெல்லாம் வாழ வேண்டும் என எழுதி வைத்தார்களோ அதை ஆணாதிக்கம் தம்முடையதை மறைத்து பெண்களுக்கு மட்டும் அடிமேலடியாக அடக்கி வைத்திருக்கிறது. நான் பெண்ணியம் பேசவில்லை. மனிதாபி மானத்தின் அடிப்படையில் தான் பேசுகிறேன்' என்பார்.

1955 இல் நாம் எழுதிய 'வாழ்வைத்தேடு' சிறுகதையை ஆனந்தனில் பிரசுரித்து 'நல்லகாலம்' வளையிலை, கொப்பிலை தொங்கவிடாமல் வைத்தியநாதி ஆக்கிவிட்டீனம்' என்று ஒரு சிறு பாராட்டு.

வரதர் சீர்திருத்தக் கருத்துக்களை ஆவேசப்படாமல் அனாயாசமாய் எழுதியுள்ளார். இறுதிவரை சமூகத்துக்கு நல்ல விடயங்களைத் தந்துகொண்டே இருந்தார்.

## குறமகள்

அவருடைய மனைவி மகாதேவி குழந்தைபோலப் பேசுவார். தாய்மையான உள்ளம். எம்மை மிக நட்பாக நடத்துவார். குழந்தைகளை இருவரும் நன்றாக வளர்த்தார்கள். படிப்பிலிருந்து எல்லாமே உரிமை கொடுத்துத்தான் வளர்த்தார்கள். புகழ்வாய்ந்த ஒருவரைத் தந்தையாகப் பெற்றது அவர்கள் செய்த பாக்கியமே.

அவர்களுக்கு அனுதாபத்தை தெரிவித்தும் ஆறுதல் கூறியும் வரதரின் ஆத்மா சாந்தயடையவும் பிரார்த்திக்கிறோம்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# கனவுகள் இங்கே, காசு எங்கே?

வங்கியில் என்னிடம் வரும் வாடிக்கையாளர்கள் தினம் சொல்லக் கேட்கிறேன். வீட்டைப் புதுப்பிக்க வேண்டும். காசு எங்கே? கடன் அட்டைகள் பல இருக்கிறன. காசு எங்கே? பெப்ரவரிக்குள் ஆர்.ஆஸ். எஸ் பிக்குப் பணம் வேண்டும். காசு எங்கே?

வருடக் கணக்காய் திட்டமிட்டிருந்த விடுமுறை அடுத்த வருடம் வருகின்றது. காசு எங்கே? இன்னொரு வீடு வாங்கி வாடகைக்கு விட வேண்டும். காசு எங்கே? இப்படிப் பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். இது கற்பனை அல்ல, தினம் நான் கேட்கும் பலரின் கதை. சற்றே திட்டமிட்டுச் செயலாற்றினால் காசு எங்கே இருக்கின்றது என்று தெரிய வரும், இல்லையேல் ஓடித்திரியும் வாழ்க்கையில் ஒன்றுக்கும் நேரமிராது. காசும் கடைசியில் இருக்காது. உண்மையில் நீங்கள் நினைப்பதை விட நீங்கள் பணக்காரர். உங்களுக்குத் தெரியவில்லை. அவ்வளவுதான். ஒரு தம்பதியர் சென்ற வாரம் என்னிடம் வந்தனர்.

மூன்று வங்கியில் அவசரத்தேவைக்குப் பணம் எடுப்பதற்கு என்று செக்கிங் கணக்கு வைத்திருக்கிறார்கள். ஒன்றில் இருப்பு 1500. மற்றது இரண்டிலும் ஐயாயிரத்துக்கு மேல் இருப்பு இருக்கிறது. ஒன்றிலும் வட்டி என்று ஒன்றும் வரவில்லை. மாறாக 1500 இருப்பு இருக்கும் கணக்கில் சேவைக்கட்டணமாக எட்டு டொலர்கள் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தது. காரணம் இருப்பு 2000 க்கு குறைய இருந்தால் அந்த வங்கி சேவைக் கட்டணத்தை வசூலிக்கும். இந்தச் சிறிய தகவல் தெரியாததனால் அவர்களுக்கு எவ்வளவு நட்டம் பார்த்தீர்களா? இந்த முதல் வங்கி கணக்கில் 2000 க்குத் குறையாமல் வைத்திருப்பார்களேயானால் அந்த எட்டுடொலர்களை மிச்சப்படுத்தியிருக்க முடியும். மேலும், தேவைப்படும் போது எடுக்கும் வசதியுடன் அதிக வட்டி தரும் சேமிப்புகளும் வங்கியில் உள்ளன. அவற்றில் அதிகப்படி பணத்தைப் போட்டிருந்தால் சிறிதளவாவது வட்டி கிடைத்திருக்கும். காசு எங்கே இருக்கின்றது என்று இவர்களுக்குத் தெரியவில்லை. இல்லையா? சேமிப்பை விட்டுக் கடன் பக்கம் வருவோம். இது ஒரு உண்மை சம்பவம். மாத வருமானத்துக்குள் கடனை எல்லாம் கட்டி குடும்பம் நடத்த முடியவில்லை என்று ஒரு தம்பதியினர் அழுதனர். சரி உங்கள் கடன்களைச் சொல்லுங்கள் என்றேன். அவர்கள் கொடுத்த கடன் பட்டியல் இதோ.

| | தொகை | வட்டி % | மாதத்தவணை |
|---|---|---|---|
| வீட்டுக்கடன் | $240,000 | 4.20% | $1290 |
| கார்கடன் | $15,000 | 14.0% | $450 |
| கடன்அட்டைகள் | $10,000 | 19.5% | $300 |
| லைன்ஆப் கிரிடிட் | $25,000 | 9.0% | $ 750 |

அவர்களின் வீட்டைப் பற்றிய விவரங்களையும், அவர்களின் சம்பள விபரங்களையும் தெரிந்து கொண்டபின் அவர்களின் எல்லாக் கடன்களையும் ஒன்றாக்கி ஒரே ஒரு வீட்டுக்கடனாக அவர்களின் கடன் சுமையைக் குறைக்க முடியும் என்று தோன்றியது, அவர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தனர். அவர்களுக்கு மேலும் ஒரு உண்மையை விளங்கப்படுத்தினேன். வீட்டுக்கடனை முற்றிலும் அடைத்துவிட்டு புதிய கடன் பெறும் போது அபராதத் தொகை கட்ட வேண்டி வரும். ஆனாலும் நன்மை உள்ளது. அந்தக் கணக்கைக் கீழே தருகின்றேன்.

முன்பு

| | தொகை | வட்டி% | தவணை |
|---|---|---|---|
| வீட்டுக்கடன் | $240,000 | 4.20% | $1290 |
| கார்கடன் | $15.000 | 14% | $450 |
| கடன் அட்டை | $10,000 | 19.5% | $300 |
| லைன் ஆப் கிரடிட் | $25,000 | 9.0% | $750 |
| வீட்டுக்கடனைத் திருப்பிச் செலுத்த அபராதம் | $3,000 | | |
| மொத்தம் | $293,000 | 5.0% | $2790 |

இப்போது

| | | | |
|---|---|---|---|
| வீட்டுக்கடன் மட்டும் | $293,000 | 5.0% | $1780 |

மற்ற எல்லாக் கடன்களும் கொடுக்கப்பட்டுவிட்டன. மொத்த வட்டியில் 0.6% குறைந்திருக்கின்றதைக் கவனித்தீர்களா? ஆனால் மாதந்தோறும் கடனுக்குக் கட்டிய தொகை மூன்றில் இரண்டு பங்காகக் குறைந்தது. மாதந்தோறும் ஆயிரம் டொலருக்கு மேல் சேமிக்கப்பட்டிருப்பதையும் பார்த்தீர்களா?

ஒவ்வொருவரின் கனவுகளும் மாறுபட்டவை. தேவைகளும் மாறுபட்டவை. வசதிகளும் வாய்ப்புகளும் கூட மாறுபட்டவை. முதலீடு, சேமிப்பு, கடன்கள் எதுவானாலும் உங்கள் சூழ்நிலையில் காசை மிச்சப்படுத்தி கனவுகளை நனவாக்க முடியும்.

உங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ற நல்ல ஆலோசனைகளை தனிப்பட்ட முறையில் பெற இக்கட்டுரை ஆசிரியருடன் ஸ்கோஷியா வங்கியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் 416.439.3040 Ext 3040



**பெரி. முத்துராமன்**

• கெட்டகாலம் வந்தால் எப்படி சமாளிப்பதென்று, நல்லகாலம் இருக்கும் போது சிந்திப்பது ஒவ்வொருவரது கடமையும் ஆகும்.

• எல்லா மனிதரையும் நம்புவது ஆபத்து, நம்பாதிருப்பது பேராபத்து

• ஆராய இயலாதவன் குருடன்; ஆராய மனமில்லாதவன் மடையன்; ஆராயப் பயப்படுபவன் அடிமை.

## கனடாவில் தமிழ் படிக்கும் மேற்கிந்திய இளம் சமூகத்தினர்



595 Albion Road இல் அமைந்துள்ள மேற்கிந்திய மக்களுடைய இந்துக் கோயிலான காளி அம்மன் கோயிலில் மேற்கிந்திய இளம் சமூகத்தினர் தமிழ் படித்து வருகின்றனர். படத்தில் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.
மேலதிக தொடர்புகளுக்கு: ராஜ் 416.315.6874 / 416.285.1605 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம்.


BREAD MASTER BAKERY

புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.



• ரொட்டி வகைகள்
• புரியாணி வகைகள்
• புட்டு வகைகள்
• மரக்கறிச் சாப்பாடு
• சிக்கின், மட்டன் சாப்பாடு
• இடியப்பம்
• நூடில்ஸ்

ஓடர்கள் (Order) ஏற்றுக்கொள்ளப்படும்

மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்

கடை திறக்கும் நேரம்
காலை 6:00 மணி முதல்
இரவு 10:00 வரை



உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்
416.299.5083
31 Tapscott Rd. B3, Scarborough
Malvern Area

தமிழர் நிர்வாகத்தில் ஒரு
EMBASSY

• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள்
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

# வாகனவிபத்துக்களில் நட்டஈடு

## தொடர் - 2

## இங்கு ஒரு வாகன விபத்து!

*ஒரே பாதை வழியில் நேரடியாக சென்ற இம் மூன்று குறிப்பிட்ட வாகனங்களுக்கு இடையில் நடந்த விபத்தில் சட்ட ஒழுங்கு விதிகளின் படி* (Accident Fault Determination Rules & Regulation 668 - Under the Insurance Act)

சரி? பிழை? என்பது எப்படி தீர்மானிக்கப்படுகின்றது? எந்த அடிப்படையில் எந்த விகிதாசாரத்தில் காப்புறுதி நிறுவனங்கள் நட்ட ஈட்டினை வழங்குகின்றன? இவ்விபத்தும், நட்ட ஈடு கோருகின்ற செயல்பாடும் மீண்டும் வாகன காப்புறுதி பத்திரத்தினை புதுப்பிக்கும் போது மாத கட்டு பணத்தினை அதிகரிக்க பண்ணுமா?
இதுவே இங்கு உள்ள கேள்வி!

சரி! கீழே உள்ள இந்த குறிப்பிடப்பட்ட விபத்து நடந்த வரை படத்தினை சற்று உற்று பாருங்கள்!

ஒரே பாதையில், ஒரே வழியில் ஒன்றுக்கு பின் ஒன்றாக போய் கொண்டிருந்த A B Cஎன்ற மூன்று வாகனங்களும் ஒன்றுக்கு பின் ஒன்றாக மோதப்பட்ட நிலையில் வாகனங்கள் மூன்றும் பாதிக்கப்பட்ட நிலையில் நிற்கின்றன.




மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் படி A என்ற வாகனத்திற்கு பின்னால் B என்பவர் மோதி விட்டு நிற்க, வேகமாக வந்த C என்பவர் திடீர் என நிறுத்த முடியாது என்ற வாகனத்திற்கு மோதி விட்டு நிற்கும் நிலைமை!

அதாவது இவ்விபத்து நடந்த நிலைமையில் சரி? பிழை? எந்தப் பக்கம் என்பதனை தீர்மானிக்கும் "சட்ட ஒழுங்கு விதி" இவ்வரைபட வினாக்களுடன் ஆங்கிலத்தில் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது.

This Section applies with respect to an incident involving three or more automobiles that are travelling in the same direction and in the same lane. (A chain reaction)

If all three automobiles involved in the incident are in motion and autombile A is the leading vehicle, automobile B is second and automobile C is the third vehicle.

1. In the collision between automobiles A & B the driver of automobile A is not at fault and the driver of automobile B is 50% percent at fault for the incident.

2. In the collision between automobiles B & C the driver of automobile B is not at fault and the driver of automobile C is 100% persent at fault for the incident.

அதாவது A என்பவருக்குரிய வாகனத்திற்கு பின்னால் B என்பவரின் வாகனம் மோதிய விபத்தில் A என்பவரில் எதுவிதமான தப்பும் இல்லை. B என்பவரில் 50%மான தப்பு மதிப்பிடப்படுகின்றது.

ஆனால் இதே நேரம் B என்பவரின் வாகனத்துடன் பின்னால் மோதிய C என்பவரின் விபத்தில் B என்பவரில் எதுவிதமான தப்பும் இல்லை. C என்பவரில் 100% வீதமான தப்பு சட்டவிதிகளின்படி மதிப்பீடு செய்யப்படுகின்றது.

சுருக்கமாக குறிப்பிடப் போனால் இம் மூன்று வாகனங்களுக்கு இடையேயான சங்கிலி தொடர்விபத்தில் A என்பவர் முதல் நபராக நிற்பதால் தமக்கு பின்பக்கமாக மோதிய விபத்தில் எதுவித செலவுமில்லாத (No cost claims) நட்ட ஈட்டினை பெற உரித்துடையவராவார்.

B என்பவர் ஒரு பக்கத்தில் துர் அதிஷ்டசாலியாகவும், இன்னொரு நிலையில் நின்று பார்க்கும் போது சற்று அதிஸ்டசாலியாகவும் நிற்கின்றார். ஏனெனில் A என்பவருக்குரிய வாகனத்திற்கு பின்புறமாக மோதியதில் 50% வீதமான தப்பும், C என்பவர் இவ் B என்பவரின் வாகனம் பின்னால் மோதியதில் எதுவிதமான தப்பும் இல்லாதவராக மதிப்பிடப்படுகின்றார்.

A என்பவருடன் இவ் B என்பவர் மோதிய நிகழ்வு இவ் இருவருக்கும் இடையில் மட்டும் நடந்திருந்தால் இவ் B என்பவரில் 100% தப்பாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும். இவருக்குரிய ஒரு அதிஷ்டம்! மூன்றாவது வாகனம் பின்னால் மோதிய படியால் இவரது தப்பு இந்த இடத்தில் 50% வீதமாக மதிப்பிடப்படுகின்றது.

சரி! இந்த விபத்தும், தப்புகளும் ஒருபுறம் இருக்கட்டும். இந்த விபத்தில் நட்ட ஈடு வழங்கல் என்பது எப்படி வழங்கப்படுகின்றது என்பதனை பார்ப்பதற்கு முதல் அடிப்படை வாகன காப்புறுதியில் (One way insurance coverage) உள்ள நட்டஈடுகள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது என்பதனை பார்ப்போம்.

### *LIABLITY*
தங்களின் வாகனம் ஓட்டுதல் என்ற செயற்பாட்டினால் ஏனையோரின் உடமைகள், உடலுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான பொறுப்பு நட்டஈட்டு பிரிவு!

### *ACCIDENT BENEFITS*
சரி! பிழை! எந்த பக்கம் இருந்தாலும் விபத்தின் போது தங்களின் உடல் காயங்களுக்கு ஏற்படும் நட்டஈட்டு பிரிவு!

### *Uninsured & Unidentified Coverage*

காப்புறுதியில்லாத அல்லது மோதி விட்டு தப்பி ஓடியவரின் நிலையில் தங்கள் வாகனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளின் நட்டஈட்டு பிரிவு!

Direct property Compensation no Fault Coverage

தங்களில் தப்பு எதுவும் இல்லாது தங்களின் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்டஈட்டு பிரிவு!

(இந்த பிரிவில் இருந்து நட்டஈடு கோருவதனையே "செலவில்லாத நட்டஈடு" (No cost covergae) என குறிப்பிடுவதுண்டு. ஏனெனில் புதுப்பிக்கும் போது நட்டஈடு கோரியதற்காக மாத கட்டு பணம் அதிகரிக்கமாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட நான்கும் அடிப்படை காப்புறுதி ஒப்பந்தங்களுடன் விரும்பினால் மேலதி பணம் செலுத்தி பின்வரும் இரு நட்டஈட்டு பிரிவுகளை பெற்று வைத்திருக்கலாம்.

### *Collision Coverage*

தங்களின் தப்பினால் தங்களின் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்டஈட்டு பிரிவு!

### *Comprehensive Covergae*

வாகனங்கள் திருட்டு மோதல், தீ பிடித்தல் கண்ணாடிகள் உடைதல் போன்ற இழப்புகளுக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு!
இங்கு மேற்குறிப்பிடப்பட்ட விபத்துக்கு மீண்டும் வருவோம்.

A என்பவர் தமது வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கு தம்முடைய வாகன காப்புறுதி நிறுவனத்தில் இருந்து செலவில்லாத நட்டஈட்டினை பெற்று கொள்கின்றார். இதில் இவருக்கு "Deductible" என ஒரு குறிப்பிட்ட ஒரு தொகை ஒப்பந்தத்தில் சேர்த்து இருந்தால் அந்த சிறுதொகையினை வாகன உரிமையாளர் தமது சொந்த பணத்தில் இருந்தே செலுத்த வேண்டும்.

("Deductible" எனப்படுவது நட்டஈட்டின் ஒரு சிறுதொகை. அதாவது இது $500 டொலராக இருந்தால் மொத்த இழப்பீடு ஒரு $6000 டொலர் என்றால் $500 டொலர் வாகன உரிமையாளர் செலுத்தவேண்டும். மிகுதி $5,500ஐ வாகனகாப்புறுதி நிறுவனம் செலுத்தகொள்ளும்.

சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

B என்பவருக்கு A என்பவரின் வாகனத்திற்கு பின்னால் மோதியல் ஒரு $5000 டொலர் இழப்பு என வைத்துக் கொண்டால் 50% இவருடைய தப்பு மிகுதி 50% தப்பு இல்லை என்பதால் இத் தப்பு இல்லாத 50% வீதத்தினை மட்டும் "செலவில்லாத காப்புறுதி" பிரிவில் இருந்து பெற்று கொள்ளலாம். அதாவது $2500 டொலர் கிடைக்கும் மிகுதி $2500 டொலரினையும் மேலதிக காப்புறுதி என குறிப்பிடப்படும் "Collision" பிரிவில் இருந்து பெறலாம்.

(இங்கும் "Deductible" இருந்தால் அதனையும் இவ் இரு பிரிவுகளிலும் தமது பணப்பையில் இருந்து கொடுத்த வேண்டும்") ஆனால் இக் "Collision" பிரிவில் இருந்து நட்டஈடு பெறும் போது புதுப்பிக்கும் போது கட்டு பணம் அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்று. C என்பவர் இவ் B என்வருடன் மோதிய நிகழ்வில் B என்பவரில் தப்பு என்பதே இல்லை. இதில் ஒரு $6000 டொலர் இழப்பு என்றால் இதனை B "செலவில்லாத நட்டஈடு" பிரிவில் இருந்து பெற்று கொள்ளலாம்.

C என்பவர் இங்கு முழுமையான தப்புக்கு உரியவர்! இவருக்கு ஒரு $2000 டொலர் பாதிப்பு ஏற்பட்டால் மேலதிக பணம் செலுத்தி "Collision" பிரிவினை பெற்று இருந்தால் அதில் இருந்து நட்டஈடு பெறலாம். அது இல்லையேல் நட்டஈடு பெறவே முடியாது.

சரி! இந்த இடத்தில் இன்னொரு முக்கிய விடயம்! விபத்துக்கு உள்ளான ஒவ்வொருவரும் தத்தமது காப்புறுதி கம்பனியில் இருந்து தங்கள் விபத்து அறிக்கைகளை சமர்ப்பித்து நட்டஈடு பெறலாமே தவிர மற்றவரின் காப்புறுதி கம்பனியினை தட்டிப் பார்க்க முடியாது.

(ஒரு விதி விலக்கு! ஒருவர் தம்மில் தப்பு இல்லாத நிலையில் மோசமான, இயங்க முடியாத உடல் காயத்திற்கு உள்ளாகியிருந்தால் மட்டும் தமது காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ள "விபத்துகள் சலுகை" Accident Benefits பிரிவில் இருந்து நட்ட ஈடு பெற்றதுடன் மேலதி தொகைக்கு வக்கீல் மூலம் தமக்கு விபத்தினை உருவாக்கிய வாகன சாரதியில் காப்புறுதி கம்பனி மேல் நட்டஈடு வழக்கினை ஒரு முறை தட்டிப்பார்த்து கோரலாம்.

நட்டஈடு வழங்கலின் பின்பு மூன்று சாரதிகளின் காப்புறுதி கம்பனிகளும் பின்னர் வழங்கிய இழப்பீடுகளை இக்காப்புறுதிகளின் அடிப்படையில் பரிமாறி கொள்ளுவார்கள். இங்கு இப்படி ஒரு விபத்து! நட்டஈடு கோரிக்கைகள் இடம்பெற்றால் இவைகள் தங்கள் பெயரின் பதிவில் போகும்.

எப்போது விபத்து நடந்தது?
என்ன மாதிரியான வாகனம்?
வாகனத்தின் உரிமையாளர்?
மோதிய மறுவாகனம் பற்றிய விபரம்?
காப்புறுதி கம்பனிகளின் விபரங்கள்?
குறிப்பிட்ட மோதலில் தப்பு என்பது ஒவ்வொரு பக்கத்திலும் எவ்வளவு வீதம்?
பெற்ற நட்டஈட்டு தொகைகள் எவ்வளவு?

இப்படியே எல்லாம் பதிவில் போகும். சகல வரலாறும் வெளியே வரும். விரும்பினால் தங்கள் பெயரில் கடந்த காலங்களில் உள்ள பதிவுகளை எந்த நேரங்களிலும் தாங்களாகவே பரிசீலனை செய்து பார்க்கலாம்.

காப்புறுதி வழங்க முன்பு வாகன காப்புறுதி கம்பனிகள் இவைகளை பரிசீலனை செய்தே விலைகளை தீர்மானிப்பது வழமையாகும்.

ஆனால் இறுதியாக ஒன்று! காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தி விபத்து நடந்தால் நிரபராதியாக தப்பு இல்லாதவராக இருந்தாலும் தமது வாகன பாதிப்பு நட்ட ஈடு ஒன்றுமே பெறமுடியாது. (உடல் காயம் ஏற்பட்டால் மட்டும் காப்புறுத இல்லாவிட்டாலும் வேறு வழியில் பெறலாம்) காப்புறுதி இல்லாததற்கு தண்டனை ஆகக்குறைந்து $5000 டொலர் ஆகும்.





வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# “அமைதிக்கு பெயர் தான் சாந்தி! இந்த ஆணுக்கும் பெயர் சாந்தி!”

## விளையாட்டுத் தகவல்கள் 205

இந்த கட்டுரை எழுத தொடங்கும் போது மிகவும் சங்கடமாகவே தொடங்குகின்றேன். 'சொன்னாலும் வெட்கம்' சொல்லாமல் விட்டதால் தற்போது பிடித்தும் விட்டார்கள். இலங்கை - இந்திய தாய் தகப்பனுக்கு பிறந்தவர் தான் இந்த தமிழ் பெண் சாந்தி! அண்மையில் தமிழக முதல்வர் கருணாநிதி கூட இப் பெண்ணுக்கு பத்து இலட்சம் ரூபாய் பரிசாக வழங்கியுள்ளார். ஆனால் 'கிணறு வெட்ட பூதம் வந்த கதையாக' தற்போது சாந்தி பெண் அல்ல ஆண் என்பது நிரூபணமாகியுள்ளது.

பாவம் சாந்தி இதுவரை மேற்கொண்ட பயிற்சிகள், செலவுகள் எல்லாம் 'விழலுக்கு இறைத்த நீர்போல் ஆகியுள்ளது'. ஆனால் உண்மையிலேயே இந்திய விளையாட்டு அதிகாரிகள் உண்மை தெரிந்து கொண்டு மூடி மறைத்து உள்ளார்கள். உண்மையிலேயே இந்த அதிகாரிகளே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.



தமிழக வீராங்கனை எஸ். சாந்தி பாலின சோதனையில் தோல்வியடைந்தார் என்பதையும், பதக்கம் பறிக்கப்படும் என்பதையும் ஆசிய ஒலிம்பிக் குழு (ஒ.சி.ஏ) மூலமாக உறுதி செய்தது இந்திய ஒலிம்பிக் சங்கம் (ஐ.ஒ.ஏ).

மேலும், சாந்தியிடமிருந்து வெள்ளிப்பதக்கத்தை திரும்பப் பெறக்கோரி இந்திய தடகள சம்மேளனத்திடம் இந்திய ஒலிம்பிக் சங்கம் கேட்டுள்ளது. இந்திய ஒலிம்பிக் சங்க மருத்துவ கமிஷனின் தலைவர் டாக்டர் மன்மோகன் சிங் இது குறித்து ஆராய்ந்து பத்து நாட்களுக்குள் அறிக்கை சமர்பிக்க கோரியுள்ளது இந்திய ஒலிம்பிக் சங்கம்.

உண்மையை மூடி மறைப்பதா? தமிழக தடகள வீராங்கனை சாந்தி, இதற்கு முன்னர் ரயில்வே வேலைக்காக மனு செய்திருந்த போது நடத்தப்பட்ட பாலின சோதனையிலும் தோல்வியடைந்துள்ளார் என்கிற விவரம் இந்திய தடகள சம்மேளனத்திற்கு முன்பே தெரிந்திருந்தும், அந்த உண்மையை வெளியிடாமல் மறைத்துள்ளது என்று ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

"இது தடகள வீராங்கனையின் குற்றமல்ல. ரயில்வே துறை நடத்திய பாலின சோதனையில் சாந்தி தோல்வியடைந்த பின், அவர் இன தடகள போட்டிகளில் பங்கேற்க தகுதியற்றவர் என்று ஒதுக்கிய பின்பும், அவரை இந்திய தடகள அதிகாரிகள் தேர்ந்தெடுத்து, பதக்கம் பெற தவறான வழியை தேர்ந்தெடுத்துள்ளனர் என்று தோஹா சென்றுள்ள இந்திய அதிகாரிகள் குழுவில் உள்ள ஒரு முக்கிய அதிகாரி பிடிஐ செய்தியாளரிடம் தெரிவித்தார்.

விளையாட தடை - தற்போது சாந்தி பாலின சோதனையில் தோல்வியடைந்து விட்டதால், இனி அவர் இரண்டு ஆண்டுகளுக்கு போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்படலாம். மேலும், பாலின சோதனையில் தோல்வியடைந்தவர்கள் பூரண ஹார்மோன் தெரபி, அறுவைச்சிகிச்சை ஆகிய மருத்துவ முறைகள் மேற்கொண்டு குணமடைந்த பின்பு இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்திய தடகள மருத்துவ குழுவுக்கு மனு செய்யலாம் என்று இந்திய ஒலிம்பிக் சங்க அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்பு 1970 களில் இந்தியா வீராங்கனைகள் அனுசுயா பாய், நானி ராதா ஆகியோரும் இத்தகைய பாலின சோதனை சிகிச்சையில் சிக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆஷஸ் கிண்ணத்தை கோட்டை விட்ட இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரைத் தோற்ற இங்கிலாந்து அணியை அந்நாட்டு பத்திரிகைகள் ஒரு பிடி பிடித்துவிட்டன. அணியின் பயிற்சியாளர் டன்கன் பிளெட்சரைத்தான் எல்லா பத்திரிகைகளும் குறிவைத்து எழுதியுள்ளன. அணித் தலைவர் பிளின்டாஃபும் கண்டனக் கணைகளிலிருந்து தப்பவே இல்லை.

பேர்த் நகரில் நடந்த மூன்றாவது ரெஸ்ற் போட்டியில் இங்கிலாந்து அணியை அவுஸ்திரேலியா 206 ஓட்ட வித்தியாசத்தில் தோற்கடித்து தொடரை வென்றது அனைவரும் அறிந்ததே.

தி சன் - 'தி சன்' என்ற பத்திரிகை, இங்கிலாந்தின் தோல்வியை 'பெர்தடிக்' என்று தலைப்பிட்டு எழுதியிருந்தது. 'பேதடிக்' என்றால் பரிதாபகரமாக என்று அர்த்தம். அந்தப் பரிதாபகரம் அரங்கேறிய இடம் பேர்த் என்பதால் இரண்டையும் இணைத்து புதிய வார்த்தையையே அகராதிக்கு அளித்திருந்தது.

இங்கிலாந்து ஏன் தோற்றது என்பதற்கு பத்து காரணங்களையும் அது கூறியிருந்தது. அதில் பிளெட்சர், பிளிண்டாஃப் ஆகியோரின் திறமைக் குறைவு பட்டியலிடப்பட்டிருந்தது. இவ்விதமாக இங்கிலாந்து அணியின் ஒன்பது குறைகளையும், அவுஸ்திரேலிய அணியின் பலம் என்ற ஒரே ஒரு நிறையையும் அது சுட்டிக்காட்டியிருந்தது.

உலக கோப்பை போட்டியின் போதும் பிளெட்சர் கோச்சாக நீடித்தால், இங்கிலாந்து அணியின் கதி என்ன என்பதை ஊகிப்பது கடினமான விடயமே இல்லை என்று அது முடித்திருந்தது.

தி டெய்லி மிரர் - ஆண்ட்ரூ பிளிண்டாஃப் ஆட்டத்தின் இறுதி நாளில் ஆட்டம் இழந்து பெவிலியனுக்குத் திரும்புவதை படமாக வெளியிட்டு, 'டங்கை மூலையில் வீசுங்கள்' என்று தலைப்பிட்டிருந்தது. 'தி டெய்லி மிரர்'. ஆஷஸ் தொடரை இங்கிலாந்து இழப்பதற்கு டங்கன் பிளெட்சர் எந்த வகையில் காரணம் என்பதை முழுப் பக்கத்துக்கு அது செய்தியாக எழுதியிருந்தது.

2005இல் அவுஸ்திரேலியாவை நாம் ஆஷஸ் தொடரில் வென்ற போது, டிரபால்கர் சதுக்கத்தில் (இலண்டனில் உள்ளது) நாம் நடத்திய கொண்டாட்டம் வெறும் 'ரீ பார்ட்டி' என்று சொல்லும் அளவுக்கு அவுஸ்திரேலியர்கள் இதைக் கொண்டாடினர் என்று தனது வயிற்றெரிச்சலையும் சேர்த்து எழுதியிருந்தது.

டெய்லி ரெலிகிராப் - கடந்த ஆண்டு ஆஷஸ் தொடரை இங்கிலாந்து வென்றபோது, '16 ஆண்டுகள் 15 நாள்கள் காத்திருந்ததற்குப் பிறகு இங்கிலாந்து வெற்றி பெற்றது' என்று தலைப்பிட்டு மகிழ்ந்திருந்தது 'டெய்லி ரெலிகிராப்'. அதை நினைவுகூரும் வகையில், 'ஒரு ஆண்டு, 96 நாள்கள், 12 மணி நேரத்துக்குப் பிறகு ஆஷஸ் தொடர் கையை விட்டுப் போனது' என்று துக்கம் கொப்பளிக்க தலைப்பிட்டது.

தி கார்டியன் - பந்துவீச்சில் விக்கெட்டை வீழ்த்தும் கலையை பிளிண்டாஃப் மறந்துவிட்டார் என்றே தோன்றுகிறது. பேட்டிங்கோ படுமோசமாகிவிட்டது என்று 'தி கார்டியன்' வருத்தம் தெரிவித்திருந்தது.

தி இன்டிபென்டன்ட் - ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது உறுதியான பிறகு ஆண்ட்ரூ சைமண்ட்ஸ், சுழல்பந்து வீரர் ஷேன் வார்னேயை தூக்கிச் சென்றார். அந்த புகைப்படத்தை வெளியிட்டு, பிளெட்சரை குத்திக்காட்டும் வகையில் தலைப்பிட்டிருந்தது 'தி இன்டிபென்டன்ட்'.

**எஸ். கணேஷ்**

தி ரைம்ஸ் - அவுஸ்திரேலியாவுடனான ஒரு நாள் துடுப்பாட்ட போட்டிகளில் மைக்கேல் வாகனை துவக்க பேட்ஸ்மேனாகவும் அணித்தலைவராகவும் இங்கிலாந்து அணி மீண்டும் பெறும் என்று 'தி ரைம்ஸ்' நாளிதழ் கருத்து தெரிவித்தது.

இங்கிலாந்து ஆஷஸ் தொடரை வாங்கித் தந்த பயிற்சியாளர் பிளெட்சரால், அதே அற்புதத்தை அவுஸ்திரேலியாவில் நிகழ்த்த முடியவில்லை என்று யதார்த்தமாக குறிப்பிட்டிருந்தது.

### அம்மாவாகும் டேவன் போர்ட்

மூன்றுமுறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள அமெரிக்க மங்கை லின்ட்சே டேவன்போர்ட், குழந்தைக்கு தாயாகப் போகிறார்.

அதனால், வரும் ஜனவரியில் நடைபெறும் அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அவர் பங்கேற்கப் போவதில்லை என டேவன்போர்ட்டின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

30 வயதாகும் டேவன்போர்ட், ரெனிஸ் வீரர் ஜோனதன் லீச்சுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக குடும்பம் நடத்திவருகிறார். தற்போது கர்ப்பமாக உள்ள அவர் வரும் கோடைகாலத்துக்கு முன்னர் முதல் குழந்தையைப் பெற்றெடுக்க உள்ளார்.

அதன் பிறகு அவர் ரெனிஸ் விளையாட்டைத் தொடருவாரா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை.

1988ஆம் ஆண்டு யு.எஸ். ஓபன், 1999 இல் விம்பிள்டன், 2000 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் டேவன்போர்ட். இதுவரை 51 ஒற்றையர் பட்டங்களைக் கைப்பற்றியுள்ளார். 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

உலக ரெனிஸ் தரவரிசைப் பட்டியலில் நாலு சீசன்களில் முதலிடத்தைப் பிடித்துள்ள டேவன்போர்ட், தற்போது 25வது இடத்தில் உள்ளார்.

காயம் காரணமாக கடந்த சீசனில், பிரெஞ்ச் ஓபன் மற்றும் விம்பிள்டன் போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை.

### டேவிஸ் கோப்பை சம்பியன் - ரஷியா

மொஸ்கோவில் நடைபெற்ற டேவிஸ் கோப்பை ரெனிஸ் போட்டியில் ஆர்ஜென்ரினாவை 2 - 3 என்ற விகிதத்தில் வீழ்த்தி ரஷியா கோப்பையை கைப்பற்றியது.

ஏற்கனவே 2 - 2 என்று வெற்றி பெற்று ஆர்ஜென்ரீனா, ரஷியா அணிகள் சமநிலையில் இருந்தன. இந்நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி ஆட்டம் முக்கியத்துவம் பெற்றிருந்த நிலையில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியது ரஷியா.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா வீரர் ஜோஸ் அகாசோவை 6 - 3, 3 - 6, 6 - 3, 7 - 6 என்ற செட்களில் தோற்கடித்தார் ரஷியாவின் மாரட் சஃபின்.

முதல் ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா வீரர் டேவிட் நல்பாண்டியனிடம் தோல்வியடைந்தார் மாரட் சஃபின் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷியாவில் நடந்த டேவிஸ் கோப்பை போட்டியில் முதன் முதலாக தாய் நாட்டில் கோப்பையைக் கைப்பற்றுகிறது ரஷியா. கடந்த ஆண்டு டேவிஸ் கோப்பையை அமெரிக்காவிடம் இழந்தது ரஷியா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த டேவிஸ் கோப்பை ரஷியாவுக்கு 2வது டேவிஸ் கோப்பையாகும். இதற்கு முன்பு 1981 இல் பிரான்ஸில் நடந்த போட்டியில் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.

### தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்

கராச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற ஐந்தாவது மற்றும் கடைசி ஒரு தினப்போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது பாகிஸ்தான்.

இதையடுத்து, ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரை, 3 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது பாகிஸ்தான். முதல் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்புக்கு 238 ஓட்டங்களை சேர்த்தது.

சந்தர்பால் அபாரமாக ஆடி 101 ஓட்டங்களும், லாரா 44 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

அணித்தலைவர் லாரா 25 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஒரு தின போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த ஐந்தாவது வீரர் எனும் சிறப்பை பெற்றார். இவருக்கு முன்னதாக சச்சின், கங்குலி, ஜயசூர்யா, இன்சமாம் ஆகியோர் அந்த சிறப்பை பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் தரப்பில் நாவேத் உல் ஹசன் நாலு விக்கெட்டுகளை வீழ்த்தினார். அடுத்து துடுபெடுத்தாடிய பாகிஸ்தான், 46.5 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி எளிதில் வெற்றி பெற்றது. முகமது ஹபீஸ் 92 ஓட்டங்களும், காம்ரன் அக்மல் 56 ஓட்டங்களும் சேர்த்து வெற்றிக்கு உறுதுணையாகினர். இத்தொடரில் 11 விக்கெட்டுகளை கைப்பற்றிய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் நாவேத் உல் ஹசன் தொடர் நாயகனாகத் தேர்வு பெற்றார்.

### விளையாடப்போகும் நட்சத்திரம்

அவுஸ்திரேலியாவின் உலகின் தலை சிறந்த சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன். ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற இவர் ரெஸ்ற் போட்டியில் மட்டும் விளையாடிவந்தார். இந்த நிலையில், ரெஸ்ற் போட்டியில் இருந்து அவர் ஓய்வு பெறுகிறார். இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

மெல்போர்ன் துடுப்பாட்ட சிறப்பில் வோர்ன் நேற்று இது குறித்து செய்தியாளர் மகாநாட்டை நடத்தினார். அதில் அவர் கூறியதாவது. இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடருடன் எனது துடுப்பாட்ட வாழ்க்கை முடிகிறது. சர்வதேச துடுப்பாட்ட உள்ளூர் துடுப்பாட்டம் என அனைத்து வகை போட்டியிலும் இருந்தும் விடை பெறுகிறேன். சர்வதேச கிரிக்கெட்டில் எனது வளர்ச்சி நம்ப முடியாத வகையில் அதிசயமாக இருந்தது.

2005 ஆண்டு ஆஷஸ் கிண்ணத்தை வென்றவுடன் நான் ஓய்வு பெற நினைத்தேன். ஆனால், எனது பணி தொடர்ந்தது. தற்போது, நாங்கள் ஏற்கனவே தொடரை வென்றுவிட்டோம். இன்னும் இரண்டு ரெஸ்ற் போட்டிகளில் இருக்கின்றன. அதில் 700 விக்கெட்டை தொட்டுவிடுவேன்.

மூன்றாவது ரெஸ்ற்ரான அடிலைடில் பெற்ற வெற்றி மறக்க இயலாது. நான் விளையாடிய ரெஸ்ரில் சிறந்த ரெஸ்ற் இதுவாகும். இரண்டு ரெஸ்ற் ஆடிய பிறகு எனது எதிர்காலம் குறித்து முடிவு செய்யவில்லை என்றும் வோர்ன் கூறினார்.

ஆஷஸ் தொடரில் நாலாவது ரெஸ்ற் 26 ஆம் திகதி மெல்போர்னில் தொடங்குகிறது. ஐந்தாவது மற்றும் இறுதி ரெஸ்ற் ஜனவரி 2ம், 6ம் திகதிகளில் சிட்னியில் நடைபெறும். இந்த ரெஸ்ற் ஆட்டங்கள் வோர்னின் கடைசிப்போட்டியாகும்.

ஓய்வுக்கு பிறகு அவர் தொலைக்காட்சி வர்ணனையாளராக பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

37 வயதான வோர்ன் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரெஸ்ரில் அறிமுகமானார். இந்தியாவுக்கு எதிராக சிட்னியில் விளையாடியது அவரது முதல் ரெஸ்ற் ஆகும். ஒருநாள் போட்டியில் 1993 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக அறிமுகமானார்.

ரெஸ்ற் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வோர்ன் 992 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். 143 ரெஸ்ரில் 699 விக்கெட் எடுத்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான நாலாவது ரெஸ்ரில் அவர் 700 விக்கெட்டை கைப்பற்றி சாதனை படைப்பார். 193 ஒருநாள் போட்டியில் விளையாடி 293 விக்கெட்டுகளை எடுத்துள்ளார்.

இன்றும் இரண்டு ரெஸ்ற் இருப்பதால் மற்றும் ஒருநாள் போட்டியில் சேர்த்து அவர் 1000 விக்கெட்டை தொடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாட்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணெயினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

I.G.Ayurvedic Medical Services (SriLanka)

# வீடு/வியாபார - விற்பனையில் 2007

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 242

புதிய ஆண்டில் பல சௌகரியங்களையும் பெற்று சாதனைகள் பல புரிந்து, இன்புற்றிருக்க இறைவனை பிரார்த்திப்போமாக!

ஆண்டுகள் செல்கின்றன. இதுவே இயற்கையின் நியதி. எதுவும் மாறாத போதும், இது மாறவே செய்யும். இது மட்டுமே எப்பொழுதும் ஒரு மாறிலி. வாழ்வின் மாற்றமே தவிர்க்க முடியாது. மாற்றத்தை சிறப்பாக மாற்றுவதே வாழ்க்கை.

பொதுவாக காலத்தின் மாற்றத்துடன் வீட்டின் விலை, விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை, வட்டிவீதம், பண இறக்க வீதம், பொருளாதார வளர்ச்சி வீதம், வீட்டுச்சந்தையில் விற்கப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை மாறிக்கொண்டே வருகின்றது.

கனடா பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரியநாடு, சனத்தொகையில் ஒப்பீட்டளவில் சிறிய நாடு. அரசியலில் ஸ்திரமான நாடு. பொதுவாக மக்கள் வாழவிரும்பும் நாடு. வருடா வருடம் 250,000 இற்கு மேற்பட்ட புதியவரவாளர்கள் நாட்டிற்குள் வந்துகொண்டு இருக்கின்றார்கள். புதிய வரவாளர்களில் அனேகர் கனடிய முக்கிய நகரங்களான ரொறொன்ரோ, மொன்றியல், வன்கூவரிற்கே வருகின்றார்கள். 2006ஆம் ஆண்டில் புதிய வரவாளர்களின் ஒருபகுதியினர் கல்கறி, எட்மென்ரன்ஜயும் தமது இருப்பிடமாகத் தெரிவு செய்துள்ளார்கள். இருந்தும், ரொறொன்ரோ மாநகரை நோக்கி வருபவர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டதாக எதுவித அறிக்கையும், இதுவரை வெளிவரவில்லை. இதற்கு மாறாக ரொறொன்ரோவில் வருகை அதிகரித்துள்ளது. 2004ஆம் ஆண்டில் 125,000 புதிய குடிவரவாளர்களும், 2005ஆம் ஆண்டில் 140,000 புதிய குடிவரவாளர்களும் ஒன்ராரியோவில் குடியேறியுள்ளார்கள். இவர்களில் கூடிய பகுதியினர் ரொறொன்ரோவில் குடிவரவாளர்களாகியுள்ளார்கள் என்பது கணக்கீடு. இந்நிலைமை வீட்டு விலையில், வியாபார வளர்ச்சியில் எவ்வித மாற்றத்தை ஏற்படுத்தும். அத்துடன் தொழில்புரிவதற்கான கட்டிடங்களில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

2007ம் ஆண்டு முதியவர்களில் (1946ஆம் ஆண்டிற்கு பிற்பாடு பிறந்தவர்கள்) ஒரு பகுதியினர் தொழிலில் இருந்து விடுபட இருக்கின்றனர். ஆனால் ஒன்ராரியோ மாநில அரசு, கடந்தவருட இறுதியில் 65 வயதை அடைந்தவர்கள் வேலையிலிருந்து நீங்க வேண்டும் என்ற நிலையை நீக்கப்பட்டுள்ளது. அதாவது புதிய சட்டத்தின் படி 65 வயதில் இளைப்பாற வேண்டும் என்ற நிலைமை நீக்கப்பட்டுள்ளது. 65 வயதைத்தாண்டியும் எவரும் விரும்பினால் தொழில் செய்யமுடியும். இந்த வயதுச்சட்டம், அமலுக்கு வந்தபின் எடுக்கப்பட்ட, புள்ளிவிவரத்தின்படி வயதானவர்களில் பலர் ஒரு குறிப்பிட்ட மணிநேரம் மட்டுமே தொழில்புரிய விரும்புவதாக தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வரும் தொழில் சம்பந்தமான வல்லுனர்கள் (Professionals: Engineers, Doctors, Dentists....) தொழில்புரிவதற்கேற்ப சட்டத்தில் சில மாற்றம் ஏற்படும் போலவும் தோன்றுகின்றது. இவை ரொறொன்ரோவிற்கு வர இருக்கும் மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தும், மற்றும் ரொறொன்ரோவில் இருந்து வெளியேறும் மக்களின் எண்ணிக்கையை குறைக்கும் என்றே தோன்றுகின்றது.

கடந்த நாலு ஐந்து வருடங்களாக, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், வருகின்ற ஆண்டு வீட்டுச்சந்தைகளில் இறக்கம் ஏற்படுமா என்ற கேள்வி பொதுவாக வீட்டு நுகர்வோர்களில் தோன்றுவது இயல்பாகக் காணப்படுகின்றது. இருந்தும், இதுவரை வீட்டின் சராசரிவிலையில் இறக்கம் ஏற்படவில்லை. பதிலாக ஒவ்வொரு வருடமும் நாலிலிருந்து ஆறுவீதம் வரை விலை அதிகரித்தே வருகின்றது. இது கடந்த வருடமும் (2006) பொருந்தும். பொதுவாக கடந்த வருடம் வீட்டின் விலையில் ஒருவித மந்த போக்கு ஏற்பட்டது. ஆனாலும் வீட்டின் சராசரி விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு காணப்பட்ட சராசரி வீட்டு விலை $198,150 இலிருந்து $352,000 இற்கு மேலாக 2006 இல் அதிகரித்துள்ளது. ரொறொன்ரோவில் சராசரி வீட்டுவிலை வன்கூவருடன் ஒப்பிடும்போது, மற்றைய நாடுகளுடனும் ஒப்பிடும்போதும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

பொருளாதார நிபுணர்களின் அறிக்கைகளின்படி, 2007 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1/2% வரையான வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம். கடந்த வருடத்தின் இறுதி அரை வருடத்தில் வட்டி வீதத்தில் எதுவிதமாற்றமும் ஏற்படவில்லை. இருந்தும் மோட்கேஜ் வட்டி வீதத்தில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது ஐந்து வருடத்திற்குரிய வட்டிவீதம் 5% அளவில் பெறக்கூடியதாக உள்ளது. அத்துடன் பொருளாதார பணவீக்கமும் கனடிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாலும் பொருளாதாரத்தில் பாரியமாற்றத்தை எதிர்பார்க்கமுடியாது. இன்றைய கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் டேவில் டொட்ஜ் பொருளாதார நிபுணர்களால் மதிக்கும் ஒருவர் முன்னைய லிபரல் கட்சியினால் ஆளுனராகக் கொண்டு வரபட்ட இவர் கனடிய பொருளாதாரத்தை மிகச்சிறந்த முறையினால் வைத்திருப்பது அனேகராலும் மதிக்கப்படுவது. இவரின் நம்பிக்கைத் தன்மையை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கலாம்.

இந்த வருடத்தில் மாநில, நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால் தேர்தலிற்கு முந்திய வரவுசெலவுதிட்டத்தில் மக்களிற்கு சில நன்மைகள் இருப்பதையும் எதிர்பார்க்கலாம். இதுவும் நுகர்வோரிற்கு பொதுவாக நன்மையை கொடுக்கும். ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 2006ஆம் ஆண்டில் வீட்டுச்சந்தையில் விற்க இருந்த வீடுகளில் எண்ணிக்கை குறைந்து வருவதையும் அவதானிக்ககூடியதாக உள்ளது. இதனால் வாங்குபவர்களிற்கு சாதகமாக இருந்த வீட்டுச் சந்தை ஓரளவு சமநிலையை அடைவதை அவதானிக்ககூடியதாக உள்ளது. ரொறொன்ரோப் பகுதியில் புதிதாக நிர்மானிப்பதற்குரிய நிலம் அருகிவருகின்றது. இதனால் Sub Division போன்ற வீட்டுத்தொகுதிகளைக் கட்டுவது இலகுவாக இருக்காது. அதாவது 1000 - 1500 என்ற எண்ணிக்கை உள்ள வீடுகளை ஒரே இடத்தில், ரொறொன்ரோ நகரத்தில் எதிர்வரும் காலத்தில் கட்டுவது அல்லது நிர்மாணிப்பது என்பது இலகுவாக இருக்கமுடியாது. இதனால் ரொறொன்ரோ பகுதியில் இருக்க விரும்புபவர்கள் அதிகளவு விலையைக் கொடுத்துத்தான் வீடு வாங்க வேண்டியிருக்கும். அடுக்கு மாடிக்கட்டிடத்தில் இருக்கும் அலகுகளையே (Condo. Units) இளம் குடும்பத்தினர் நாட வேண்டிய கட்டாயம் தேவைப்படும். இதுபோன்ற காரணிகளால் வீட்டின் விலையில் அதீத இறக்கத்தை எதிர்ப்பார்க்க முடியாது.




இப்பொழுது இரு இடங்களில்,

HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

**New Condo. for sale**
- 2 bedroom + Den
- Balcony
- 1 parking
- Immediate Occupancy
- Close to GTA Square, New Sathiya Sai Centre & Iyappan Temple

**Condo. For Rent**
- 1 bedroom or 2 bedroom
- Middlefield & Finch
- Available immediately
- Newer building

**Business space for lease**
- 1000 sqft
- Kennedy & Eglinton
- Vacant
- Next to Yogas Super Market

**Convenience store for sale**
- HWY 401 & Westney Ajax
- Reasonable Rent

**Office space for rent**
- Sheppard & Port Union
- 1900 sqft
- Gross rent $2,200

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# 2006 - மீள்பார்வை

ஜனவரி 2006

01 - உலகில் எப்போதும் புத்தாண்டு முதன்முதலில் பிறக்கின்ற பி.்.ஜி (Fiji) தீவில், நள்ளிரவு புத்தாண்டு பிறப்பைக் கொண்டாட, ஜப்பான் மற்றும் அதையண்டிய பிரதேசங்களிலிருந்து மக்கள் படையெடுத்தனர். மலைகளில் ஏறி, உலகின் முதல் புத்தாண்டு பிறப்பை, கண்கூடாகக் கண்டு மகிழ்ந்தனர்.

03 ஜனவரி - மன்னார், வலயங்கட்டில் வைத்து, வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜர் ஜெயந்தன் கொல்லப்பட்டார்.

05 - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் சரோன், திடீரென கோமா நிலைக்குச் சென்றார். அவரது மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டதால் பாரிய தாக்கம் ஏற்பட்டதாக வைத்திய அதிகாரிகள் அறிவித்தனர்.

19 - கிட்டத்தட்ட ஒரு வருடம் எதுவித தகவலும் இல்லாத நிலையில், அல்கைதா அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லாடன் இந்நாளில் மீண்டும் அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை ஒன்றை அறிவித்தான். அமெரிக்காமீது மீண்டும் கடும் தாக்குதல்கள் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளதாக எச்சரிக்கை விடுத்தான் பின்லாடன்.

19 - விண்வெளியில் நடமாடும் புளூட்டோ கிரகத்தை ஆராய்வதற்கான விசேட ஓடமொன்று, இந்நாளில் ஏவப்பட்டது. New Horizons என்ற பெயரில் ஏவப்பட்ட இந்த விண்வெளி ஓடம், தொடரும் ஒன்பது ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பயணிக்கும். கிட்டத்தட்ட மூன்று பில்லியன் மைல்கள் பயணிக்கவுள்ள இந்த ஓடம், ஒன்பது வருடங்களின் பின்னர் புளூட்டோ கிரகத்தை அடைந்து, அதன் வெளிப்பரப்பு, காலநிலை, சூழ்நிலை போன்றவற்றை ஆராய்ந்து பூமிக்குத் தகவல் தருமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

23 - கனடாவில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீவன் காப்பர் தலைமையிலான கொன்சவேட்டிவ் கட்சி வெற்றி பெற்றது. போல் மார்ட்டின் தலைமையிலான லிபரல் கட்சி, மிகச் சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

25 - பாலஸ்தீனத்தில் நடைபெற்ற தேர்தலில், யாரும் எதிர்பார்க்காத வகையில், ஹமாஸ் அமைப்பு வெற்றி பெற்றது. 132 ஆசனங்களைக் கொண்ட சட்டமன்றத்தில், 74 ஆசனங்களை ஹமாஸ் பெற்றுக்கொண்டது. ஆளும் கட்சியான ப.்.த்றா அமைப்பினர், 43 ஆசனங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவினர். கடந்த 40 வருடங்களாக, பாலஸ்தீனத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியிலிருந்த ப.்.த்றா கட்சி தோல்வியைத் தழுவியதையடுத்து, பிரதமராக இருந்த அஹ்மட் கூரேய் பதவி விலகினார்.

இதற்கிடையில், ஹமாஸ் அமைப்பு, வன்முறைகளை முற்றாகக் கைவிட்டு, இஸ்ரேல் என்ற நாட்டையும் அங்கீகரித்தால் மட்டுமே, தமது அரசு பாலஸ்தீன அதிகாரத்துடன் உறவுகளைத் தொடருமென, இஸ்ரேல் தற்காலிக பிரதமர் எகுட் ஒல்மேட் அறிவித்தார்.

25 ஜனவரி - நோர்வே அபிவிருத்தி அமைச்சரும், தலைமை அனுசரணைப் பொறுப்பாளருமான எரிக் சொல்ஹெய்ம், கிளிநொச்சி சென்றார். அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நேரில் சந்தித்து, சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தார்.

30 ஜனவரி - 30ம் திகதி 5 பேரும், 31ம் திகதி 5 பேருமென, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 தொண்டர்கள் கருணா குழுவால் கடத்தப்பட்டனர்.

31 - அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ், வருடாந்த தேசிய உரையை ஆற்றினார். State of the Union Address என்று அழைக்கப்படும் இந்த வருடாந்த கொள்கைவிளக்க உரையில், ஈரான், சிரியா போன்ற நாடுகளின் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

பெப்ரவரி 2006

03 - சவூதி அரேபியாவிலிருந்து எகிப்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த உல்லாசப் பயணிகளின் பாரிய படகு, முற்றாக நீரில் மூழ்கியது. இதிலே பயணித்த 1000 பயணிகளில், 200 பேர் பலியானமை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

04 - சர்வதேச அணுசக்தி ஆய்வு நிறுவனங்களுக்கான மாநாட்டில், ஈரானின் அணுசக்தி முன்னெடுப்புக்களை எதிர்த்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இவர்களது தீர்மானத்தை தான் பொருட்படுத்தப் போவதில்லையென அறிவித்த ஈரான் தலைமை கூறியது.

04 - டென்மார்க் பத்திரிகையொன்றில் வெளியான நபிகள் நாயகம் தொடர்பான கார்ட்டூன் சித்திரத்தை எதிர்த்து, பல நாடுகளிலும் வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தனர்.

10 - குளிர்காலத்தில் நடைபெறும் உலகளாவிய வின்ரர் ஒலிம்பிக்ஸ் ஆரம்பித்தது. இத்தாலியின் ரூறின் நகரில் மிகக் கோலாகலமாக நிகழ்வுகள் ஆரம்பித்தன. இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், 2008ல் பீஜிங்கிலும், 2010ல் வங்கூவரிலும், 2012ல் லண்டனிலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டது

12 - ஈராக் பிரதமர் இப்ராஹிம் அல்-ய.்.பாரி தொடர்ந்தும் பிரதமராக நீடிப்பதற்கான வாக்கெடுப்பில், 64 க்கு 63 வாக்குளைப் பெற்று வெற்றிபெற்றார்.

15 - கடந்த 2005ம் ஆண்டு ஒகஸ்ட் இறுதிப் பகுதியில் அமெரிக்காவில் உருவான கத்தரினா புயற்காற்று அனர்த்தங்களின்போது, அமெரிக்க அரசின் பல்வேறு நிர்வாக அலகுகள் மற்றும் கட்டுமானங்களிலும் மிக மோசமான மோசடிகள் இடம்பெற்றதாக, உத்தியோகபூர்வ அறிக்கை வெளியான நாள்.

17 - பிலிப்பைன்ஸ் நாட்டின் சிறிய தீவொன்றில் ஏற்பட்ட மண்சரிவில் 1000 ற்கும் அதிகமானோர் பலியானார்கள். ஜின்சோகன் என்ற நகரத்தில், மொத்தம் 1850 மக்களே வாழ்ந்தார்கள். இதில் குறைந்தது 1000 பேராவது இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

## அனன்ஸ் அல்வின்

19 - பாலஸ்தீனத்தின் புதிய பிரதமராகப் பதவியேற்பதற்காக, அக்கட்சியின் சார்பில் இஸ்மாய்ல் ஹனியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக ஹமாஸ் அமைப்பு அறிவித்தது. பயங்கரவாதக் குழு பாலஸ்தீனத்தில் தெரிவாகியுள்ளது என்று குற்றம் சாட்டிய இஸ்ரேல் அரசு, மாதாமாதம் அது பாலஸ்தீன நிர்வாகத்திற்கு வழங்கும் 50 மில்லியன் டொலர்களை நிறுத்துவதாக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது.

22 பெப்ரவரி 2006 - ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தை தொடங்கியது.

அரச தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு அமைச்சர் சிறிபால டி சில்வாவும், விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் தலைமை தாங்கினர்.

மார்ச் 2006

02 - இந்தியா அமெரிக்கா இடையே, அணுசக்தி ஒப்பந்தம் உருவானது.

10 - சற்றேண் (Saturn) என்று அழைக்கப்படும் சனிக் கிரகத்தில், நீர் இருப்பதாக ஆராய்ச்சிகளில் தெரியவந்திருப்பதாக விண்வெளி ஆய்வாளர்கள் அறிவித்தனர். விண்வெளியில் உலாவரும் ஆய்வுகூடமான கசினி (Cassini) என்ற ஓடம், இந்தக் கிரகம் தொடர்பாக பூமிக்கு அனுப்பிய படங்களில், நீர் இருப்பது நம்பகமாகத் தெரியவருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

11 - யூக்கோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சுலொபடன் மிலோசெவிச் (Slobodan Milosevic), த ஹேக்கில் (The Hague) அமைந்துள்ள சர்வதேச ஐ.நா. சிறையில் மாரடைப்பில் காலமானார்.

28 - இஸ்ரேலில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. 120 ஆசனங்கள் கொண்ட அவையில், 20 ஆசனங்களை மட்டுமே ஆளும் மத்திய கடிமா (Kadima) கட்சி பெற்றது. தற்காலிக பிரதமராக நீடித்த எகுட் ஒல்மேட், கூட்டாட்சியொன்றை அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

31 மார்ச் - தந்தை செல்வாவின் 108வது நினைவுதினம் வவுனியாவில் நினைவுகூரப்பட்டது.

ஏப்ரல் 2006

02 - ஈராக் பிரதமர் இப்ராஹிம் அல்-ய.்.பாரி பதவி விலக வேண்டுமென, சியைத் இனத் தலைவர்களின் உச்ச அதிகார பீடம் கோரிக்கை விடுத்தது. சரியான ஒரு அரசை அமைக்க அவர் தவறிவிட்டதாக காரணம் கூறப்பட்டது.

04 - ஈராக் முன்னாள் அதிபர் சடாம் குசைன், மனித குலத்திற்கெதிரான மோசமான கொலைக்குற்றவாளி என்று ஈராக்கிய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 1988ம் ஆண்டில், கேர்டிஷ் இனத்தவருக்கெதிரான இனஅழிப்பில், 50 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், இரண்டாயிரத்திற்கும் அதிகமான கிராமங்கள் அழிக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டது.

06 - நேபாளத்தில் மன்னர் கஜேந்திராவுக்கு எதிரான பொது வேலைநிறுத்தம் ஆரம்பித்தது.

06 - 375 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக நம்பப்படும் மீன் செதில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

7 ஏப்ரல் 2006 - திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் காலை 9.30 மணியளவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

18 - உலகப்போரில் கொல்லப்பட்டவர் மற்றும் போரின் அழிவுகள் தொடர்பான ஆவணங்களை ஆராய்வதற்கு, ஜேர்மன் அரசு முதற்தடவையாக இணக்கம் தெரிவித்தது. யாருக்கும் வெளியிடாத இரகசிய ஆவணங்களாகப் பேணப்பட்ட 50 மில்லியனுக்கும் அதிகமான விபரக் கொத்துக்களை, வரலாற்று ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு ஜேர்மன் அரசு அங்கீகாரம் வழங்கி, மிகப்பெரிய அரசியல் மாற்றுக் கொள்கையை வெளியிட்டது.

20 - சீன ஜனாதிபதி ஹு ஜின்ரோ, அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

25 - எகிப்தின் உல்லாசப் பயணத் துறைக்குப் பெயர்பெற்ற டாஹாப் (Dahab) உல்லாச நகரில் மூன்று குண்டுகள் வெடித்தன.

26 - ஐரோப்பிய ஒன்றியத்தின் உளவுத்துறையினர் நடத்திய புலனாய்வில், ஐரோப்பாவுக்குச் சொந்தமான ஆகாயப் பரப்பை, உத்தரவு பெறாமல் இரகசியமாக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மே 2006

05 - சூடான் அரசும், டார்.்.பர் பிரதான ஆயுதக் குழுவும், சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

14 மே 2006 - யாழ். தீவகம் மண்டைதீவு அல்லைப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் நடத்திய கொடூரத் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 9 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

15 - நீண்ட பல வருடங்களின் பின்னர், லிபியா நாட்டுடன் அமெரிக்கா இராஜாங்க உறவுகளை உருவாக்க இணங்கியது.

15 - வெனசுவேலாவுக்கு இராணுவ தளபாடங்கள் வழங்குவது முற்றாக நிறுத்தப்படுவதாக அமெரிக்கா அறிவித்தது.

21 - மொன்ரநீக்ரோ மக்கள், சேர்பியாவிலிருந்து பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பில் பங்கேற்றனர். மொன்ரநீக்ரோ மண்ணின் சுதந்திரத்திற்கான அவர்களது வாக்கெடுப்பில், தனியான ஆட்சிக்கான ஆதரவு அதிகம் வழங்கப்பட்டதால், மொன்ரநீக்ரோ தனிநாடாகப் பிரிவதற்கான மக்கள் ஆதரவை தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டின.

25 - ஈராக் யுத்தம் தொடர்பான முடிவுகளில் தாங்கள் தவறிழைத்து விட்டதாக, முதற்தடவையாக அமெரிக்காவும் பிரிட்டனும் ஒத்துக்கொண்டன.

27 - இந்தோனேசியாவில் உருவான நிலநடுக்கத்தில் 5,750 பேர் பலியானார்கள். ஜாவா தீவில் இடம்பெற்ற இந்த நிலநடுக்கம் 6.3 ரிக்டர் அளவில் பதிவானது. 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர்.

யூன் 2006

03 - பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக கனடாவில் 12 வயதுவந்த இளைஞர்களும், 5 வயது குறைந்த இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். குண்டு தயாரிப்பதற்கு முயற்சித்தமை, தொடர் குண்டுவெடிப்புக்குத் திட்டமிட்டமை, பயங்கரவாத பயிற்சிகளைப் பெற்றமை போன்ற குற்றச்சாட்டுக்களின் சந்தேக நபர்களாக இவர்கள் காணப்படுவதாக கூறப்பட்டது.

05 - சோமாலியாவின் தலைநகரான மொகடிசு (Mogadishu) ஆயுதப் போராளிகளால் கைப்பற்றப்பட்டு நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. சோமாலியாவில் ஆட்சியமைத்திருந்த பணக்கார அதிகாரிகளின் 15 வருடகால ஆட்சி முறியடிக்கப்பட்டது. இந்த பணக்கார தலைமைகளுக்கு அமெரிக்கா இரகசிய ஒத்துழைப்பும் உதவியும் வழங்கி வந்ததாக பரவலாக நம்பப்பட்ட நிலையில், இந்த வீழ்ச்சி அமெரிக்காவுக்கு ஒரு மிகப்பெரிய தோல்வி என்று சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டின.

08 - ஈராக்கில் அல்-கைதா அமைப்பிற்கு தலைமையேற்று யுத்தத்தில் ஈடுபட்டதாக நம்பப்படும் அபு முசாப் அல்-சர்க்காவி (Abu Musab al-Zarqawi) கொல்லப்பட்டார். தலைநகர் பாக்தாதின் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தாக்குதலில் இவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

13 - அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஸ், ஈராக்கிற்கு திடீர் விஜயம் மேற்கொண்டு, பிரதமரையும் அமைச்சரவை உறுப்பினர்களையும் சந்தித்தார்.

15 - மைக்ரோசொ.்.ற் (Microsoft) நிறுவனத்தின் தலைவர் பில் கேற்ஸ் (Bill Gates), இன்னும் இரண்டு வருடங்களில், தான் மைக்ரோசொ.்.ற் நிறுவனத்தின் நேரடி நிர்வாகப் பொறுப்புக் களிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாக அறிவித்தார். அவரும் அவரது பாரியாரான மெலின்டா கேற்சும் இணைந்து நடாத்தும் பாரிய மனிதாபிமான நிதியுதவி நிறுவனத்தை மட்டும், தாங்கள் நிர்வகிக்கவுள்ளதாகவும், மைக்ரோசொ.்.ற் நிறுவன நிர்வாகத்திற்கு உரிய தலைமை நிர்வாகம் நியமிக்கப்படுமென்றும் அறிவித்தார்.

15 யூன் 2006 - அனுராதபுரம் மாவட்டம் கெப்பிட்டிக்கொல்லாவவில் கிளைமோர் கண்ணிவெடியில் பயணிகள் பேரூந்து சிக்கியது. இதில் 15 குழந்தைகள் உட்பட 64 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 94 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

25 - பாலஸ்தீனப் போராளிகள், காசா (Gaza) ஊடாக நிலக்கீழ் இரகசியப் பாதையொன்றைத் தோண்டி, அதன்மூலம் இஸ்ரேலுக்குள் நுழைந்து, இரு இராணுவத்தினரைக் கொலை செய்ததுடன், இன்னுமொரு சிப்பாயைக் கடத்திச் சென்றனர். 29ம் திகதி, மேற்குக் கரையோரத்தினுள் நுழைந்த இஸ்ரேல் படைகள், அங்கிருந்த ஹமாஸ் அரசாங்க தலைவர்களைக் கைது செய்தது. ஹமாஸ் அமைப்பினர் ஆட்சியிலிருந்ததால், கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதி அமைச்சர்களையும், 23 சட்டசபை உறுப்பினர்களையும் கைது செய்தது.

தொடரும்


# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்

416-750-8118

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough





SMILE

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# நெஞ்சை அள்ளும் தஞ்சைப்பெரிய கோயில்



## தமிழ்நாடு சுற்றுலாத் தளங்கள் - 7

விண்ணளாவி நிற்கும் கோபுரம், கவின்மிகு சிற்பங்கள், எழில்மிகு தூண்கள், வனப்புமிகு வண்ணச் சுவரோவியங்கள் என ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தென்னிந்தியாவின் கலைச் சிறப்புக்கும் அன்றாட வாழ்க்கைக்கும் கண்கூடான சான்றாக இருக்கும் பழங்கால கோயில்களில் முதன்மையானது "இராசராசேச்சுரம்" என்னும் தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில். சோழப் பேரரசின் வரலாறு, இலக்கியம், கலை, கட்டிடக்கலை ஆகியவற்றின் மாட்சிமையை எடுத்துக்காட்டும் அழியாச் சின்னமாகவும் விளங்குகிறது இந்தப் பெரிய கோயில். உலகிலுள்ள பாரம்பரியமிக்க 13 இடங்களில் ஒன்றாக இந்தக் கோயிலை யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களில் ஈடு இணையற்றவராகத் திகழ்ந்தவர் முதலாம் இராசராச சோழன் (கி.பி. 985 - கி.பி. 1014). அவரது ஆட்சிக்காலத்தை ஒரு பொற்காலம் எனக் குறிப்பிடுகின்றனர் தென்னிந்திய வரலாற்று ஆய்வாளர்கள். தலைசிறந்த ஆட்சியாளரும், வீரமும் தீரமும் நிறைந்த போர்வீரருமான ஒப்புயர்வற்ற இந்த இராசராச சோழன் தீவிர சிவபக்தரும் கூட. இவருடைய ஆற்றலுக்கும் அன்புக்கும் அறிவுக்கும் திறனுக்கும் இறைப்பற்றுக்கும் இவர் எழுப்பியுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களும் அக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளும் சாட்சி. ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களை இராசராச சோழன் கட்டியிருந்தாலும், இன்று அவன் பெயர் சொல்லி நிற்பதும் பழங்கால தமிழர்களின் கட்டிடக் கலைக்கு வியத்தகு சான்றாக





இருப்பதும் தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில்தான். தஞ்சையைச் சுற்றுவட்டாரங்களில் எங்கும் கல் இல்லாத நிலையில், எங்கிருந்தோ கருங்கல்லைப் பெயர்த்துக் கொண்டுவந்து, 320 மீட்டர் உயரத்துக்கு சாரம் கட்டி, அக்காலத்தில் இக்கோயிலைக் கட்டியுள்ளார்கள் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சோழநாடு மருத நிலப்பகுதியாகும். குறிஞ்சி நிலப் பகுதியைக் காண, மேற்கே திருச்சிக்குத்தான் செல்லவேண்டும். அங்கிருந்துதான் இவ்வளவு கற்களையும் கொண்டு வந்திருக்கவேண்டும்.

தஞ்சையிலிருந்து மூன்று கி.மீ. தூரத்திலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊர் வரைக்கும் சாரம் அமைத்து, கற்களைக் கொஞ்சம் கொஞ்சமாக உருட்டி மேலே ஏற்றியிருக்கிறார் கள். நிழல்கூட கீழே விழாத நேர்த்தியுடன் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் இதில் விஷேசம்.

இராசராச சோழன், தனது 19ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில், கி.பி. 1003ஆம் ஆண்டு பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டத் தொடங்கினான். ஆறு ஆண்டுகள் இக்கோயில் திருப்பணி தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. கிழக்குமுகமாக அமைந்துள்ள இக்கோயிலின் முன்புறத்தை ஒரு பெரும் அகழி சூழ்ந்துள்ளது. கோயிலின் உள்சுற்றுக்கு மூன்று திருவாயில்கள் உள்ளன. முதல் திருவாயில் கேரளாந்தகன் வாயில் எனவும், இரண்டாவது திருவாயில் இராசராசன் திருவாயில் எனவும், மூன்றாவது சரபோஜி திருவாயில் எனவும் வழங்கப்படுகிறது. முதல் வாயில் மிக அண்மையில், 15 - 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது மற்ற இரு வாயில்களிலுருந்தும் வேறுபட்டது. முதல் வாயிலில் நுழைந்ததுமே சோழர்காலச் சிற்பக்கலையையும் கட்டிடக்கலையையும் உடனடியாக உணரலாம். அடுத்ததாக, உள்சுற்றினுள்ளே சிவபெருமானின் வாகன-மாகிய நந்தியின் (6 மீட்டர் உயரம்) நேர்த்திமிகு சிற்பம் படுத்தவாக்கில் கம்பீரத்துடன் நம்மை வரவேற்கிறது.

நந்தியையும் பெரும் மண்டபத்தின் மூன்று விதான மண்டபங்களையும் கடந்து சென்றால், எவ்வுயிருக்கும் அருள்பாலிக்கும் லிங்க வடிவ சிவபெருமானின் கருவறையை அடையலாம். இந்தியாவில் உள்ள லிங்கங்களிலேயே பெரியது இங்குள்ள லிங்கம்தான். கருவறைக்கு மேலே, 66 மீட்டர் உயரத்துக்கு (216 அடி), 13 அடுக்காக கொஞ்சம் கொஞ்சமாக சிறுத்து, உச்சியில் உருண்டைக் கல்லினாலான சிகரத்துடன் விளங்கும் விமானம் தனிச்சிறப்புடையது. மேலே உள்ள மரமந்திரக் கல் 80 தொன் எடை கொண்டதாகும். இந்த விமானம் உட்புழையுடையது. உட்புழை உருவாக்கும் வெறுமை லிங்கத்தை அகண்ட வெளியுடன் இணைக்கிறது.

தஞ்சைப் பெரிய கோயில் விமானம், மிக நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் கொண்டது. சிலைகள் வைப்பதுக்கான நேர்த்தியான சுவர் மாடங்களும் சதுரத் தூண்களும் உள்ளன. இந்தத் தூண்களின் அகன்ற ஒப்பனைப் பட்டைகளில் தெய்வங்களின் சிற்பங்கள் உள்ளன. சோழர்காலக் கலைக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டுகள் இந்த சிற்பங்கள். மண்டபத்தின் கீழ்தளத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற வண்ண ஓவியங்களும் இதுபோல் அக்காலக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவை. மேல்தளத்தில் சிவபிரான் பிரிந்ததாகக் கூறப்படும் 108 நாட்டியக் கரணங்கள் புடைப்புச் சித்திரங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

தஞ்சைப் பெரிய கோவிலின் உட்புறச் சுவர்களில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகள் சோழர் காலத்துச் சமயசார்பற்ற வாழ்க்கைப் பற்றிய தகவல் கருவூலமாக இன்று விளங்குகின்றன. சமுதாயம், வரலாறு, பொருளாதாரம், இராணுவ வரலாறு, அக்கால ஆட்சிமுறை, கலை, கைவினைகள்... ஆகியவை குறித்து இக்கல்வெட்டுகள் மூலம் அறியலாம். கோயிலில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, அரசன் பங்கேற்ற முக்கிய நிகழ்ச்சிகளையும், அவன் ஆட்சிகாலத்தில் நடந்த சம்பவங்களையும் தேதிவாரியாக இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இராசராசன், அவனது தங்கை குந்தவை தேவி, அவன் தேவிமார்கள், ஆயத்தார், சேனாதிபதிகள், அதிகாரிகள் ஆகியோர் வழங்கிய நன்கொடைகளின் பட்டியலும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தவிர செப்பேடுகளிலும் இதுபோன்ற தகவல்களைப் பதிவுசெய்து வைத்த முதல் தமிழ் மன்னர் இராசராச சோழன்தான். கடல் கடந்து பிறநாடுகளிலும் பரவி சோழப் பேரரசு வலியும் பொழிவும் பெற்றுச் சிறந்து இருந்ததை அறிய இந்தக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மிகச் சிறந்த ஆவணம்.

தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயிலின் பாரம்பரிய முக்கியத்துவம் கருதி, பராமரித்து வரும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கோயிலின் சுற்றுவட்டாரப் பகுதியில் பூந்தோட்டம் அமைத்துள்ளார்கள். கோயிலின் வரலாற்றுச் சிறப்புக்கும் கலை அழகுக்கும் மேலும் சிறப்பு சேர்க்கிறது இந்தப் பூந்தோட்டம்.

### தஞ்சைக்கு எப்படிச் செல்லவேண்டும்?

திருச்சியிலிருந்து ஒன்றரை மணி நேரப் பயணத்தில் இருக்கிறது தஞ்சாவூர். எனவே, சென்னையிலிருந்து வருபவர்கள் திருச்சி வந்து, அங்கிருந்து தஞ்சாவூர் செல்லலாம். சென்னையிலிருந்து திருச்சி மார்க்கமாக தஞ்சாவூருக்கு ரயில் வசதியும் உள்ளது. பேரூந்து போக்குவரத்தும் அடிக்கடி உள்ளது. சென்னையிலிருந்து தனியார் சொகுசுப் பேரூந்துகளும் தினமும் மாலையில் இயக்கப்படுகின்றன. ஆனால், மதுரை பக்கமிருந்து வருபவர்கள் திருச்சி வராமல், நேரடியாக தஞ்சாவூர் வரலாம். இப்படி வருவதால் பயணநேரம் மிச்சமாகும். மதுரையிலிருந்து மணிக்கொருமுறை தஞ்சாவூருக்கு பேரூந்து உள்ளது. தஞ்சாவூரில் தங்க வசதியான லாட்ஜுகளும் நல்ல உணவு விடுதிகளும் உள்ளன.

**வழிப்போக்கன்**


**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் ஊடாக முழுமையாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பாகுபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam

416•400•6406

# தமிழீழம் மலர பால் பொங்குக

காடு கெடுத்து களனியாக்கி
மாடு கன்று உதவியுடன்
பாடுபட்டு நெல் விளைக்கும்
நாடு போற்றும் விவசாயி
சூடும் மழையும் தருகின்ற
பீடுமிக்க ஆதவற்கு
கூடும் அன்பின் மிகுதியினால்
வீடு முன்றில் பொங்கல் செய்வான்

சூரியன் ஒளிமுதல். உலகம் அவனால் உருள்கின்றது, ஒளிர்கின்றது. உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுவகைகளின் உற்பத்திக்கு உதவுபவன் அவன். ஒளியில்லாத உலகை எண்ணிப் பார்க்கவே முடியாதுள்ளது. எனவே தான் இளங்கோ அடிகள் ‘ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்’ எனக் கூறிப் போந்துள்ளார் போலும். ‘உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு’ என்று நக்கீரரும் கூறியுள்ளது சூரியனின் முதன்மையை உணர்த்துகின்றது. ஆதிகாலம் தொட்டே மக்கள் ஒளியை வழிபட்டு வந்துள்ளனர் எனலாம். சூரிய வழிபாடு பண்டையகாலம் தொட்டே பயிலப்பட்டு வந்ததாக அறிகின்றோம். இறைவனே சோதி மயமானவன் தானே! ஞாயிறு, கதிர், கதிரோன், செங்கதிர், செஞ்சுடர், வெய்யோன், ஆதவன், பரிதி, பகலவன் என்று பல பெயர்களால் சூரியன் அழைக்கப்படுகின்றான். “பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே பயிர் பூப்பதுவம் காய்ப்பதும் மாரியினாலே’ என்பதனால்

## சிவராமலிங்கம்

மண்ணுலகு மகிழ்வதும் மலர்வதும் சூரியனாலேயாகும். சூரியன் நகர்வதால் பருவகாலங்கள் ஏற்படுகின்றன. தெற்கிலுள்ள மகரரேகைக்கும் வடக்கிலுள்ள கடகரேகைக்கும் இடையில் சூரியன் சஞ்சாரம் செய்கின்றான். சூரியன் மகரரேகையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் நாளை உத்தாரயணம் என்பார்கள். இது ஜனவரி மாதத்தின் மத்தியில் தையின்



முதல் தேதியில் நிகழ்கின்றது. இது மகிழ்ச்சி மிக்க நன்னாளான படியால் தமிழ்மக்கள் பொங்கலிட்டுக் குதூகலிக்கின்றார்கள். இப்பண்டிகை சங்கராந்தி என்று கொண்டாடப்பட்டாலும் சூரியன் மகரராசிக்குப் போவதால் மகரசங்கராந்தி என்றும் கூறுவார்கள். இது பொங்கல் பண்டிகை என்றும் உழவர் திருநாள் என்றும் தமிழர் திருநாள் என்றும் அதுவடைத்திருவிழா என்றும் அழைக்கப்படுகின்றது.

வீட்டின் முன்றில் சூரியத் தேர்க்கோலமிட்டு அடுப்புவைத்து தீமூட்டி அதன் மீது புதுப்பானையில் நீரிட்டு, பால்விட்டு மஞ்சள் இஞ்சி இலைகளைக் கட்டி, பால் பொங்கி வரும்போது பச்சரிசையும் பருப்பையும் களைந்துஇட்டு வெல்லம் சேர்த்து, பொங்கலோ பொங்கல் என்று கூறி பொங்கல் செய்பவார்கள். பொங்கல் தயாரனதும் அதனை தலைவாழை இலையில் படைத்து, பழவர்க்கங்கள், கரும்பு இவற்றுடன் தூப தீபம்காட்டி சூரியனுக்கு நிவேதனம் செய்து ஆதவனை ஆராதனை செய்வார்கள். அதன் பின்னர் வீட்டிலுள்ள அனைவரும் வெண்பொங்கல் சர்க்கரைப் பொங்கலோடு விருந்துண்பார்கள். மாலையில் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று பால் பொங்கிற்றா என்று கேட்டு அளவளாவி மகிழ்வார்கள். தையின் பொங்கல் ஒரு நன்றித்திருநாள் எனலாம். உலகிலுள்ள தொழில்களில் உயரியது உழவுத்தொழிலேயாகும். உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர் என்ற ஔையாரின் வாக்கு இதனை உறுதிப்படுத்தும். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். அது பழுதில்லாத தொழிலுமாகும். உழுவார் உலகத்திற்கு அச்சாணி என்பதும் இதற்கு உறுதி சேர்க்கும். உழவன் உலகத்தவர்க்கு உணவு வழங்குபவன். அவன் சேற்றில் கால் வைப்பதனால் தான் நாம் சோற்றில் கைவைக்கின்றோம். எனவே அவன் உபகாரி ஆதவனை, பூஜிக்கும் அதேவேளை நாம் உழவனையும் வாழ்த்தி வணங்க வேண்டும். கடவுள் எண்ணும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்பதற்கமைய உண்மையாக உறுதியாக, உலகத்தவர்க்காக கைவருந்தி, மெய்வருந்தி உழைப்பவன் கண்கண்ட தெய்வம் என மதித்தும் போற்றப்பட வேண்டும். மற்ற உயிர்களுக்கு செந்தண்மை பூண்டொழுகுபவர் அந்தணர் என்றார் வள்ளுவர்.

பொங்கல் பண்டிகை ஒரு தொடர் நிகழ்வாகும். பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள் போகிப்பண்டிகை கொண்டாடப்படும். அன்று இரவு முழுவதும் சிறுவர்கள் பறை என்னும் கொட்டு வாத்தியத்தை முழங்கியபடி பாடிக் கூத்தடிப்பார்கள். வேண்டாம் என்று கழிக்கப் பட்டவற்றை அழிப்பார்கள். எனவே இது “பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்னும் அடிப்படையில் அமைந்ததாகும். அடுத்துவரும் புனிதமான பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் இதனைச் செய்வார்கள்.

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கல் நடைபெறும். உழவுத் தொழிலுக்கு உற்ற தோழர்களாக விளங்கும் காளைகளுக்கும் ஆவினத்திற்கும் பொங்கலிட்டுப் பூசிப்பார்கள். மாட்டுப் பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்கும் இட்டு மாலைகள் அணிந்து பொங்கிப் படைத்து அவிழ்த்து விடுவார்கள். அன்றைய தினம் அவைகளை வேலை செய்ய அனுமதிக்கமாட்டார்கள். தமிழ்நாட்டில் மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும் மற்றும் ஆந்திராவிலும் மஞ்சிவிரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்று முரட்டுக் காளையை மடக்கும் விளையாட்டு இடம்பெறும். இந்தப் பயங்கர விளையாட்டில் வெற்றி வீரனை கன்னி கைப்பிடிப்பாள். இதற்கு அடுத்ததாக காணும் பொங்கல் என்று கொண்டாடுவார்கள். உறவினர்கள் குடும்பத்தவர்கள் ஒருவரை ஒருவர் கண்டு மகிழும் விழாவாக இது அமையும்.

தைபிறந்தால் வழி பிறக்கும் என்பர். பானையில்பால் பொங்குவது போல் எல்லோர் உள்ளத்திலும் உவகை பொங்கும். மகிழ்ச்சியுடன் மங்களகரமாக எதிர்காலத்தை நோக்கி எல்லோரும் உறுதியுடனும் உத்வேகத்துடனும் அடியெடுத்து வைப்பார்கள். உலகில் இன்று நடைபெறும் நிகழ்வுகளை அவதானிக்கும் போது அகிலத்தில் அமைதியும் சாந்தியும் சமாதானமும் சகோதரத்துவமும் பொங்கி மக்கள் அனைவரும் சுகமாகவும் சௌகரியமாகவும் சுதந்திரமாகவும் வாழ வழிசெய்யும்படி சர்வேஸ்வரனிடம் வேண்டி நிற்போம்.

**பொங்கும் மங்கலம் எங்கும் பொங்குக!**

• *முயலுக்கு வெற்றி அதன் காலிலே! பெண்ணுக்கு வெற்றி அவளுடைய நாக்கிலே! மனிதனுடைய வெற்றி அவன் உயர்ந்த மனத்திலே*

*- ஃபின்னிஷ் பழமொழி*

• *காலத்தை ஒத்திப் போடாதீர்கள், தாமத்தின் முடிவுகள் மிகவும் ஆபத்தானவை.*

*- ஷேக்ஸ்பியர்*


SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL





Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

• A-Z & D-Z up grade
• One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.913.9574 / 416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சதாம் ஹுசைன்...

01ஆம் பக்கத் தொடர்ச்சி

சட்டப்படிப்பை கற்று முடித்தார். 1963இல் பாக்தாத் திரும்பிய சதாம் 1968 இல் ஏற்பட்ட சதி முயற்சியில் General Ahmad Al _ Bakr ஆட்சியைக் கைப்பற்றியபோது அவரிற்கு உதவியதற்காக சதாம் உதவியாளராக நியமிக்கப்பட்டு தனது நன்றியை சதாமிற்கு தெரிவித்துக் கொண்டார்.



ஜுலை 16 1979 இல் General Ahmad Al Baar ஐ பதவியிலிருந்து அகற்றிய சதாம் ஹுசைன் தான் பதவியை ஏற்றுக்கொண்டார்.

1980 இன் இறுதியில் ஈரானிற்குள் ஊடுருவிய ஈராக்கிய படைகளுடனான யுத்தம் 8 வருடங்களாக நடைபெற்றது.

ஈரான், ஈராக் இருபகுதியிலும் மொத்தமாக ஒரு மில்லியன் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. ஐ. நா. சபையினால் கொண்டு வரப்பட்ட போர் நிறுத்தம் மூலம் இரு அண்மித்த முஸ்லிம் நாடுகளுக்கிடையேயான யுத்ததின் அகோரம் 1988இல் கட்டுக்கடங்கியது.

1983இல் இருந்த அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றீகன், சதாமுடன் தொடர்பை ஏற்படுத்தி கொண்டார். இதனால் அமெரிக்க - ஈராக் நாடுகளுக்கிடையே நல்லுறவு என்ற கிளை வளரத்தொடங்கியது.

1987/88 காலப்பகுதியில் Kurdish இனக்குழு மீது செலுத்திய இரசாயன நச்சு வாயுவினால் 5000 இற்கு மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டதுடன், 10,000இற்கு மேற்பட்ட மக்கள் குருடர்களாகினர்.

தனது கொடுங்கோல் ஆட்சிமூலம் மத்தியகிழக்கு நாடுகளை பகைத்துக்கொண்ட சதாம் ஹுசைன் ஆகஸ்ட் 02, 1990 இல் எண்ணெய் வளம் கொண்டதும் அமெரிக்காவின் சினேகபூர்வ நாடாகிய குவைத்தை கைப்பற்றியது. பல நாடுகளினதும் ஏகோபித்த கண்டனத்தை ஈராக் அலட்சியப்படுத்தியது. எந்த நாடுகளினதும் கோரிக்கைகளை மதிக்காத ஈராக்கின் படைகள் அமெரிக்க நாட்டின் படைகளின் உதவியுடன் குவைத் நாடு மீட்கப்பட்டது. இதன் மூலம் அமெரிக்க - ஈராக் தொடர்பு மிக இறுகலை ஊருவாக்கியது. அத்துடன் முன்னைய அதிபர் ஜோர்ஜ் புஷ் (Senior) ஐ கொலை செய்ய முயற்சித்ததும், சதாம் மீது புஷ் குடும்பத்திற்கு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியை உருவாக்கி விட்டது.

மார்ச் 17, 2003 இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சினால் (Junior), சதாமிற்கு 48 மணி நேர சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஜனாதிபதி பதவியை விட்டு விலகி வேறு நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பது. ஜுலை 22, 2003 இல் சதாமின் இரண்டு பிள்ளைகளும் கஸேயும் (Qusay) மற்றும் உதேயும் (Uday) கொலை செய்யப்பட்டதும் தனது சொந்த ஊரிற்கு சதாம் தப்பி ஓடி விட்டார். டிசெம்பர் 13, 2003 அன்று ரிக்றிற் இல் வைத்து சதாம் கைது செய்யப்பட்டார்.

நொவம்பர் 05, 2006 அன்று அமெரிக்க நாட்டிற்கு சார்பான ஈராக்கிய வழக்கறிஞர் கூடத்தால் இவரிற்கு கொலைத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவரின் தூக்கைப்பற்றி கூறிய Cardinal Rempta Kartomp (Pope Bednedict Xvi's top prelate for Justic issues) "சதாமின் தூக்கிலிடப்பட்ட செயலானது, ஒரு குற்றத்தை இன்னொரு குற்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளது. இந்த தண்டிப்பு ஓர் இயற்கையான முறை அல்ல. உலகத்தில் ஒருவராலும் ஒருவருக்கு சாவைக் கொடுக்க முடியாது, அரசாங்கம் உட்பட"

இன்றைய அமெரிக்க ஜனாதிபதியின் கூற்றிலிருந்து சதாமை சட்டத்திற்கு முன்னால் கொண்டு வரப்பட்டு கொடுக்கப்பட்ட தீர்ப்பானது, ஈராக்கில் நடைபெறும் கலவரத்தை முற்று வைக்கப்போவதில்லை. இருந்தும் ஈராக்கில் சட்டத்தை ஒழுங்குபடுத்தி ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான மைல்கல் இதுவாகும்.

தமிழக முதல்வர் மு. கருணாநிதி தனது உரையில், சதாமை தூக்கிலிட்டதன் மூலம் இவரை மாவீரனாக உயர்த்தி விட்டார்கள் எனக் கூறியுள்ளார்.

உலகில் எத்தனை கோடி மக்கள் பிறந்து இறந்தபோதும் எமக்கு எட்டிய காலகட்டத்தில் உருவாகிய Dictator's களில் பலர் தூக்கிலிடப்பட்டார்கள். சிலர் சிறைக்கூடத்தில் காலத்தை தள்ளினார்கள். இன்னும் சிலர் தாமே தம்மை மாய்த்துக் கொண்டார்கள். இவர்களில் சிலர் Slobodan Milosevic (முன்னாள் யூக்கோஸ்லாவிய அதிபர்), Charles Taylor (லைபீரிய இரும்பு மனிதன்), Manuel Noriega (பனாமியன் தலைவர்) , Adolf Hitler, Pol Pot (Khmer Leader, 2 மில்லியன் கம்போடியனை கொலை செய்தவர்), Nicolae (Eausescu ( ரொமேனியன் தலைவர்), Samuel Doe (லைபீரின் தலைவர்), Idi Amin (முன்னார் உகண்டா ஜனாதிபதி), மற்றும் Jean - Claude DuvalierBaby Doc ( Haiti President).

# காப்புறுதி நிதியும் மூலதனமும்

2006ஆம் ஆண்டு விடை பெறும் அதே வேளையில் எமது தனிப்பட்ட பொருளாதார நிலையை நாம் உற்று நோக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

நிதி சேகரிப்பு ஒன்று, சேகரித்த நிதியை மீண்டும் அதிகரிக்க செய்வதற்கான வழிகளை நாம் அறிந்து கொள்ளவும் வேண்டும். முதலாவதாக R.R.S.Pஇல் நிதி சேகரிப்பது மிகவும் முக்கியமானதாகும். அதுவும் தொடர்ந்து பணம் செலுத்திக்கொண்டு வரும்போது உங்கள் நிதி அதிகரிப்பதை நீங்கள் இலகுவாகக் காணலாம்.

உதாரணமாக R.R.S.Pஇல் $100.00 ஒவ்வொரு மாதமும் செலுத்தி 6% வீத வட்டிப்படி 10 வருடத்தில் தொகை $16,469 உம் 20 வருடத்தில் $46,435 உம் 30 வருடத்தில் $100,953 ஆக பெருகி இருக்கும். ஆகவே சிறுதுளி பெருவெள்ளம் போல சிரமம் பாராது அவ்வப்போது செய்ய வேண்டிய கடமைகளை செய்தால் நாம் பிற்காலத்தில் நிதிக்கு குறைவில்லாமல் வாழலாம். அடுத்த இதழில் R.R.S.Pஇல் நிதி சேகரிப்பதால் ஏற்படும் வேறு நன்மைகளை ஆராய்வோம்.

உங்கள் R.R.S.Pஇல் அல்லது காப்புறுதி தேவைகளிற்கு அழையுங்கள்.

Jey Ahamparam

RBC Insurance - 416.301.1733


HOMELIFE HIGHER STANDARDS

Win A Brand New Toyota Corolla



Buy or Sell properties thru me or our "Real Team" and you will have a chance to win one of many prizes**

McCowan/16th



Asking: $ 335,000
Less Than 3 Years Old. Semi Detached House With 3 Bedrooms. Upgraded Home. Close To School. More Than 1700 Sq.Ft with 3 Washrooms.

Morningside/Sheppard




Asking: $ 269,000
3 Bedroom Detached Home. 3Washrooms. 1 Br Basement apartment with Sep.Entrance

Woodbine/Major Mac



Asking: $ 689,000
Detached House with 5 Bedrooms 2 Years New. Approx 3500 Sq Ft. Hardwood Floor Thru out.

1st Prize 2007 Toyota Corolla



Kethees K. Seevaratnam
Sales Representative
416-275-5788

Whiby




Asking: $ 119,000
Convenience Store in a Demand Whitby Area. Gross Sales $7500 per week plus Lotto 6/49 Commission. Low Rent—$900.

McCowan / 16th Ave



Asking: $ 159,000
Convenience / Grocery Store at a prime Location. Grocery including Meat & Fish ,Lotto 6/49, ATM & Western Union.

Neilson/Sheppard



For Lease: $ 1,100 Including Utilities 3 Bedroom Semi Detached House Main Floor Only. Call For Details..

WIN



REAL TEAM

HomeLife/GTA Realty Inc. Brokerage*, 1711 McCowan Road, Scarborough, On, M1S 3Y3 Tel: 416-321-6969

Some conditions may apply** This is not intended to solicit the properties currently listed for sale *Each office independently owned and operated Vehicle may not be as illustrated


Niru BRAND ®
நிரு பிராண்ட்
'நிரு' வின் பொங்கல் புதினம்
இப்போது புதுப்பொலிவுடன், வண்ணமயமான
PONGAL SPECIAL OFFER
Contents of the package / உள்ளிருப்பவை
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
HURRY WHILE STOCKS LAST.
விரையுங்கள் இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டும்.

# ஈழத்தில் நடக்கும் போர் ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப்போர்!

## நேர்காணல் : சத்தியராஜ்

"தமிழ் சரித்திரத்தில் மிகப்பெரிய ஒரு சகாப்தம் தந்தைப் பெரியார். அவர் வாழும் காலத்திலேயே வாழ்ந்திருந்தும் அவரைப் பார்க்காமல், அவர் பேச்சைக் கேட்காமல் என் இளமைக் காலம் முழுவதும் முடிந்துவிட்டது. அவரைப் பற்றி தெரிந்து, வியப்படைந்து அவரைத் தேடியபோது அவர் நம்மைவிட்டுச் சென்றிருந்தார். அந்த மனக்கவலை எனக்கு இருந்துகொண்டே இருந்தது. இப்போது, பெரியாராகவே நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு நடிகனாக, தமிழ் சமூகம் எனக்குத் தந்த மிகப்பெரிய அங்கீகாரம் இது" என்கிறார் சத்யராஜ், உணர்ச்சிபொங்க.

இடம்: சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள சத்யராஜ் இல்லம். "விளம்பரம்" பத்திரிகைக்காக அவரைச் சந்தித்ததும், "முதலில் கனடாவாழ் தமிழர்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துகள்" என்றவர், அதன்பிறகு கேள்விகளுக்குத் தயங்காமல் பதிலளித்தார்.

கேள்வி: கிட்டத்தட்ட 23 வருடங்களாக சினிமாவில் இருக்கிறீர்கள். இந்த சினிமா வாழ்க்கை மனநிறைவைத் தந்திருக்கிறதா?

**சந்திப்பு: சிவதாணு**

சத்யராஜ்: என் சொந்த ஊர் கோயம்புத்தூர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பி.எஸ்.சி. வரைக்கும் படித்திருக்கிறேன். முப்பது வருடங்களுக்கு முந்தையக் கதைகள் இவை எல்லாமே. அன்றைக்கு இந்த சத்யராஜை எங்கள் ஊரிலேயே எல்லோருக்கும் தெரியாது. ஆனால், இன்று.. என்றைக்கு, சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் சென்னைக்குப் புறப்பட்டேனோ அன்றே என் சரித்திரம் மாறிவிட்டது. முதலில் சின்ன சின்ன வேடங்களில் நடித்தவன், வில்லனாக பிரமோசன் ஆகி எழுபத்தைந்து படங்கள், அப்புறம் கதாநாயகனாக நூறு படங்கள் என தமிழ்நாட்டில் நானும் ஒரு வாழும் பிரபலம் ஆகிவிட்டேன். இது என் வாழ்வின் இரண்டாவது கட்டம். இனி வருவதும் மூன்றாவது கட்டமும்தான் முக்கியம். கண்ணதாசன் மாதிரி, "நான் அழிவில்லாதவன்" எனச் சொல்லிக் கொள்ளும் படியான காரியத்தைச் செய்து, தமிழ் சரித்திரத்தில் என் பெயரை நிலைக்கவைக்கப் போகிறேன். "பெரியார்" படத்தில் நடிப்பதைத்தான் சொல்கிறேன். நடிகர்திலகம் சிவாஜிகணேசன் நடிக்கணும்னு ஆசைப்பட்ட பாத்திரம் ஸார். உண்மையிலேயே இப்போது மிகவும் மனநிறைவாக இருக்கிறேன்.

கேள்வி: "பெரியார்" படப்பிடிப்பு அனுபவங்களைச் சொல்லுங்களேன்?

சத்யராஜ்: முதல்நாள் படப்பிடிப்பு.. செட்டில் போய் நின்றால் கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் உணர்வாலும் கொள்கையாலும் பெரியார் தொண்டன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

"பெரியார்" படத்தில் நான் ஒன்பது விதமான கெட்-அப்பில் வருகிறேன். பெரியாரின் பல்வேறு பருவக் கெட்-அப்புகள். அதிக நாட்கள் படப்பிடிப்பு தாடி, மீசை கெட்-அப்புதான். இதை நினைத்து முதலில் பயந்தேன். தினம், தினம் ஒட்டுத் தாடி ஒட்டு மீசை வைத்தால், பசை முகத்தை இறுக்கமாக்கிவிடும். என்ன ஆகுமோ எனக் கலக்கமாக இருந்தது. ஆனால், ஒவ்வொரு நாள் படப்பிடிப்பு முடியும்போதும், அடுத்தநாள் சூட்டிங் எப்போது தொடங்கும், பெரியாராக எப்போது மாறுவோம் என ஏங்க ஆரம்பித்துவிட்டேன்.

கடைசி நாள்... பெரியார் திடலில் உண்மையான பெரியார் தொண்டர்கள் மத்தியில் பெரியாராக தோன்றி நடித்தேன். அனைவரும் கண்கலங்கி விட்டார்கள். இதனைவிட ஒரு நடிகனுக்கு வேறு என்ன பெரிய விருதுகள் வேண்டும். உண்மையில் இந்த பாராட்டு இயக்குநர் ஞான ராசசேகரனுக்குத்தான் போய் சேரவேண்டும். அவ்வளவு தூரம் பெரியாரை படித்து, ஆய்வுகள் செய்து, நுட்பமான விவரங்களுடன் இந்தப் படத்தை உருவாக்கி வருகிறார் அவர்.

கேள்வி: பெரியாராக நடிக்க பிரத்யேகமாக பயிற்சி எடுத்துக் கொண்டீர்களா?

சத்யராஜ்: பெரியாரின் அந்திம காலத்தில் அவரது குரலில் லேசான நடுக்கம் இருந்தது. அப்போது அவர் பொய்ப்பல் வைத்திருந்தார். அவருடைய எழுபத்தைந்தாவது வயதில், குன்றக்குடி அடிகளார் விழாவில் பேசும் போதுதான் முதன்முதலாக மற்றவர்கள் இந்த குரல் நடுக்கத்தைக் கவனிக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பேசிய அவரது பேச்சை கேட்டு, அதே நடுக்கத்தை என் குரலிலும் கொண்டுவர முயற்சித்திருக்கிறேன். பெரியாருக்கு நெருக்கமாக இருந்த பலரையும் சந்தித்து, அவர் எப்படி நடப்பார், எப்படி சிரிப்பார், எப்படி கோபப்படுவார்... என பலவற்றையும் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதனை படத்தில் தத்ரூபமாகக் கொண்டுவர முயற்சித்திருக்கிறேன். இந்தவகையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எனக்கு நிறைய உதவியிருக்கிறார். பெரியார் எப்படியெல்லாம் நடந்துகொள்வார் என அவர் நடித்தே காண்பித்தார்.

கேள்வி: மணியம்மையாராக குஸ்பு நடிக்கக் கூடாது என எழுந்த சர்ச்சைகள் பற்றி...

சத்யராஜ்: எதிர்ப்புகள் வந்தது உண்மைதான். ஆனால், வீரமணி அய்யாவும் உண்மையான





பெரியார் தொண்டர்களும் உறுதியாக இருந்ததால், அந்த எதிர்ப்புகளை மீறி குஸ்பு நடித்தார். இப்போது, குஸ்பு நடித்திருப்பதைப் பார்த்தால் முதலில் எதிர்த்தவர்கள் மனம் சங்கடப்படுவார்கள். அப்படி, மணியம்மையாராகவே மாறியிருக்கிறார் குஸ்பு. மேலும் மணியம்மையாராக நடிக்க குஸ்புவைத் தவிர வேறு சாய்ஸ் இருக்கிறார்களா என எனக்குத் தெரியவில்லை. அவ்வளவு பொருத்தமாக இருக்கிறார்கள், மணியம்மையாரும் குஸ்புவும்.

மற்ற நடிகைகளைவிட என்னோடு அதிகம் நடித்தவர் குஸ்பு. அந்த எல்லாப் படங்களிலும் பலவிதமான ஆடைகளில் பாடல்களுக்குச் சேர்ந்து ஆடியிருக்கிறோம். "பெரியார்" படம் முழுக்க அவருக்கும் எனக்கும் ஒரே கெட்-அப்புதான். அவருக்கு கருப்புப் புடவை - வெள்ளை ஜாக்கெட், எனக்கு கருப்புச் சட்டை - வெள்ளை வேட்டி. இப்போது, அந்தப் பழையப் படங்களை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் கூச்சமாகத்தான் இருக்கிறது.

கேள்வி: ஆரம்பகாலத்தில் தமிழ் தவிர



மற்றமொழிப் படங்களிலும் நடித்தீர்கள். ஆனால், இப்போது நடிப்பதில்லையே ஏன்?

சத்யராஜ்: ஆரம்பத்தில் எனக்கு தமிழில் சரியாக வாய்ப்புகள் இல்லாதபோது, கிடைத்த வாய்ப்புகளை விடக்கூடாது என மற்ற மொழிகளில் நடித்தேன். ஆனால், சிரமப்பட்டுதான் அதனைச் செய்ய வேண்டியிருந்தது. காரணம், வசனங்களைப் புரிந்து ரசித்து நடிக்கவேண்டும் என விரும்புபவன் நான். மொழி தெரியாதபோது, வசனங்களை பள்ளிக் குழந்தைகளைப் போல் மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது போல் இருக்கிறது. எனவே, தமிழிலேயே போதுமான வாய்ப்புகள் வரத் தொடங்கியபோது, மற்ற மொழித் திரைப்படங்களில் நடிப்பதை விட்டுவிட்டேன். வாய்ப்புகள் வந்தன. வேண்டாம் என்றுவிட்டேன். மிகச் சமீபத்தில் "குங்குமப் பொட்டுக் கவுண்டர்" படத்தை இந்தியில் எடுத்தபோது, மணிவண்ணன் கூப்பிட்டார். "வேண்டாம்னே" என்று மறுத்துவிட்டேன்.

கேள்வி: நீங்கள் ஒரு தமிழ் உணர்வாளர் என்பதால் கடைசியாக ஒரு கேள்வி. தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து என்ன கருத்து கொண்டிருக்கிறீர்கள்?

சத்யராஜ்: எந்தவொரு போராட்டத்தையும், யாரோ ஒருவரால் தூண்டிவிட முடியாது. அப்படியே தூண்டி விட்டாலும், அது தொடர்ந்து நடக்காது. உண்மையான வலியும் ஒடுக்குதலுக்கு எதிரான கோபமும் விடுதலை வேட்கையும் இருந்தால்தான், ஒரு போராட்டம் நீடித்து நிலைக்கும். ஈழத்தில் நடக்கும் போர், நமது சகோதரர்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போர். பெண்களும் அங்கே போரில் பங்கெடுக்கிறார்கள் என்றால், எத்தகைய கொடுமையை அவர்கள் எதிர்கொண்டிருக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழீழம் அமையும், தமிழனத்தின் மற்றுமொரு வெற்றி வரலாறு விரைவில் எழுதப்படும்.


வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997

• No Spraying • No Smelling • No Moving

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் **Accident & Traffic Ticket**

(18 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON

# யோகாசனம் பயில யோகம் வேண்டும்

இந்த வார்த்தையில் அடங்கியுள்ள அர்த்தத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். 'கடகயோகம்' (Katha Yoga) என்றும் உடலை சற்று வருத்திச் செய்யும் யோகசனப் பயிற்சி முறைகளையும் அதன் அதிசயிக்கவைக்கும் பலாபலன்களையும் மேலைத்தேசத்து மக்கள் அறிந்திருக்கின்றனர். பெரும்பாலானோர் பழகியும் பலன்களை அடைந்தும் வருகின்றனர். ஆனால் நம்மக்களிடையே இதுபற்றிய அறிவு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இது ஒரு வகுக்கப்பட வேண்டிய விடயம் தான். ஒரு குறிப்பிட்ட இப்பயிற்சியைப் பழகி பலன்களை அனுபவித்து வருகின்றனர். எனவே வீடுகள் தோறும் இந்த யோகக்கலையைப் பரப்புவதுடன் இளையவர்க்க மட்டத்தில் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள் பற்றிய அறிவை வளர்ப்பது நமது தலையாய கடமை ஆகும். இது ஒரு சிறந்த வருங்கால சமுதாயத்தை உருவாக்கும்.

மனிதன் வாழும் போது நோய் வந்தால் மருந்தைத் தேடுகிறான். மனச் சோர்வு அடைகிறான். இங்குதான் அவன் தவறிழைக்கிறான். ஏதோ வேக வைத்ததைத் சாப்பிட்டு விட்டு விதிவந்தால் சாவது தான் என்று உணர்கிறான். ஆனால் உடலும் மனமும் சோர்வு ஏற்பட்டபோதிலும் அஞ்சாது அதனை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கு ஊன்று கோலாக இருப்பதே யோகாசனம் என்பதை உணரவேண்டும்.

"இளமையில் இயலாமை முயலாமை
முதுமையில் முயலாமை இயலாமை"
என்பது வெறும் கூற்றாக மட்டுமன்றி உண்மையும் கூட. இளம் வயதில் ஒருவன் ஒன்றை சாதிக்க முடியாமல் போதவற்கும் காரணம் அவனது முயற்சியின்மை தான். காரணம் ஏனெனில் சிறுவயது முதலே அவன் யோகாசனம் பயிலாது தவறான உணவுப் பழக்கங்கள், நாகரிகம் என்ற போர்வையில் நடத்தையில் மாற்றம். இவற்றால் இன்றைய உலகம் தவித்து நிற்கிறது. தனக்குக் கேடுவரும் போதும் மருத்துவம் பலனளிக்காது போகும் போதும் மனிதன் தனது வாழ்நாளை அதிகரிக்க விரும்புகிறான். "கண்கெட்டபோது சூரிய நமஸ்காரம்" செய்ய விரும்புவது போன்று யோகாசனம் பற்றி தனது இறுதிக்காலத்தில் சிந்திப்பதால் என்ன பயன்?




எனவே தான் இன்றைய காலத்தில் இளைஞர்கள் பலரும் யோகாசனக் கலையின் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் பழக்கிக்கொள்வதற்கு முன்வந்துள்ளனர். எனினும் அதனை முறையாகக் கற்றுத் தருவதற்கு பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

"எப்படியும் வாழ்வதல்ல வாழ்க்கை
இப்படித்தான் வாழவேண்டும்" என்பதே வாழ்க்கை என்பதை எடுத்துணர்த்தி எல்லா வழிகளிலும் ஆயுளை நீடிக்க துணை செய்வதே இனிவரும்தொடர் கட்டுரைகளின் நோக்கமாகும்.

## ஆரோக்கியவாழ்வு

இதுவரை காலமும் மேற்குறிப்பிட்ட தலைப்பில் யோகாசனப்பயிற்சி சம்மந்தமான கட்டுரைகளை எழுதி வந்ததைப்பற்றி படித்திருப்பீர்களென நம்புகிறேன். எனினும் இப்புத்தாணடில் "வாழ்க்கை நம் கையில் எனும் தலைப்பில் தீராத நோய்களையும் தீர்த்துவைக்கும் மருந்தில்லா மருத்துவமனை யோகாசனம், பிராணாயாமம், தியானம் போன்றவற்றின் விரிவான விளக்கத்தையும் நோய் தீர்க்கும் முறைபற்றியும் ஆராய்வோம்.

இனிவரும் கட்டுரைகள் உங்களுக்கு என்ன சொல்கிறது.

1. நோயற்ற வாழ்வுக்கு ரகசியம் கூறுகிறது.

2. என்றும் இளமையுடன் இருக்க உபாயங்கள் கூறுகின்றது.

3. உடலில் உறுதியும் முகத்தில் பொலிவும், மூளையில் தெளிவும் கொடுக்கின்றது.

4. கூர்மையான அறிவும் ஒப்பற்ற ஆரோக்கியமும் பெற அரிய வழிகளை எடுத்துரைக்கின்றது.

5. பெண்களுக்கேற்படும் பல உடல் கோளாறுகளை வென்று நன்மக்களைப் பெற்று மங்கலமாக வாழ ரகசியம் கூறுகின்றது.

6. அரிய பலன்களை அளிக்கும் பல உன்னதமான ஆசனங்களைச் செய்யும் வழிகளைக்காட்டுகின்றது.

7. இந்தக் கட்டுரைகள் உங்களது மருத்துவச் செலவுகளையும் நேரத்தையும் நீக்கி நல்ல உணவு முறைகளைக் கைகொள்ள வழிவகைகளைச் செய்கிறது.

8. முதுமையைத் தவிர்த்து ஆயுளை நீடிக்கச் செய்து மரணத்தையும் தள்ளிப் போடப் பல செய்திகளைத் தெரிவிக்கின்றது.

9. மனிதரிடத்துள் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்த உதவுகிறது.







## யோகா சோதிடம்



• *கிரகப் பொருத்தம் பார்த்தல்*
• *சுபமுகூர்த்தம் கணித்தல்*
• *பலன் பார்த்தல்*
• *சாதகக் குறிப்புக் கணித்தல்*

416-299-8361

**Markham/Sheppard**



**$199,900**

Condo Apt, 2+1 Bedrooms,
2 Full Washrooms, Luxurior &
2 Level Upgraded Penthouse Unit
Newly Renovated, Roof Top Garden

**Morningside & Finch**



**$459,900**

Detached 2-Storey
4+1 Bedrooms,4 Washrooms,
Close to School, Steps To TTC
5 new Appliances.

**Kingston/Markham**



**$121,541**

Condo Apartment
1 Bedroom,1 Washroom,
Close to School, Steps To TTC
Open Concept,5 new Appliances.

**THANK YOU FOR YOUR BUSINESS**
**WISH YOU ALL A**
**A HAPPY NEW YEAR**

Happy New Year



"FRIENDLY
&
PROFESSIONAL"

*Win a brand new car and much*
*If You Buy Or Sell Before Apri*



Some condition apply



Jayanthi Sritharan
Sales Representative
Direct: 416-918-5872
Email:sritharanj@rogers.com

HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969 Fax:(416)321-6963




*Independently Owned and Operated
This is not intended to solicit properties currently listed for sale.

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

# உரமாகும் மரங்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 27

நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். உருவ அமைப்பில் ஒருசிலர் ஒரேமாதியாகக் காட்சிளித்தாலும் உள்ளத்தளவில் வேறுபட்டவர்களே. ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் மற்றைய குழந்தையில் இருந்து வேறுபடுகின்றது. அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்ற உறவுகள் ஒரு கூட்டுறவுக்கான குறியீடுகளேயன்றி இவர்கள் அனைவரும் ஒரேவகையான, மாறுபாடற்ற மனோபாவத்தைக் கொண்டவர்களது சேர்க்கை என்று பொருள் கொள்ளப்படுவதில்லை. எனவே இந்த வேறுபாடுகள் அதாவது உளவியல் ரீதியான வேறுபாடுகள் தான் ஒருவரை மற்றவரில் இருந்து வேறுபடுத்துவதுடன் ஒரு தனித்துவத்தையும் கொடுக்கின்றது.

அடிப்படையில் நாம் வாழும் உலகமானது பூரணத்துவப்படுத்தப்படாமல் படைக்கப்பட்டிருக்கிறது. படைக்கப்பட்ட அனைத்தும் மூலப்பொருட்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி அவை மறைக்கப்பட்டும் இருக்கின்றன. உலகில் வாழும் உயிரினங்கள் தத்தமது அறிவுக்கு ஏற்ப மறைக்கப்பட்டிருக்கும் மூலப்பொருட்களை கண்டறிந்து முடிவுப் பொருளாக்கித் தமது வாழ்வியல் நடவடிக்கைகளை நகர்த்திச் செல்கின்றன. உயிரினங்களில் மனிதன் ஒரு தந்திரசாலி. மறைக்கப்படடுள்ள மூலப்பொருட்களை மற்றயை உயிரினங்கள் கண்டுபிடித்து அவை வாழ்விற்கு உகந்தவை என்பதை உறுதிப்படுத்திய பின் தனதாக்கிக் கொள்ளும் தந்திரசாலி. காட்டிலே வாழும் குரங்கு ஒன்று உண்ணுகின்ற இலைகள், பூக்கள், பழங்கள் என்பன உயிர் வாழ்வதற்கு உகந்தவை என்பதைக் கண்டுபிடித்த மேதாவி. நாளடைவில் மூன்று இறாத்தல் எடையுள்ள அதற்குச் சமமாக உலகில் எதுவுமேயில்லாத தனக்குமட்டுமே உரித்தான, மற்றவர்களால் உரிமை கொள்ளப்படமுடியாத ஒன்று தன்னிடம் இருப்பதை உணரத் தொடங்கினான். அதுதான் மனிதனின் மூளை. மற்றைய விலங்குகளிலிருந்து தன்னை வேறுபடுத்தும் ஒரு அளவுகோலாக அதை உணர்ந்தான். அதுமட்டுமன்றி ஒரேவகையான வாழ்க்கைச் சுழற்சிக்குள் உட்பட்டிருக்கும் உயிரினங்களில் இருந்து தன்னை வேறுபடுத்தி பல்வேறு பரிமாணங்களூடாகத் தன்னை வழிநடத்தி மிகவும் அபரிமிதமான, ஆச்சரியத்தக்க விடயங்களைக் கண்டறிந்து உலகத்தையே அதிசயிக்க வைக்கிறான்.

நமது வாழ்வியல் மாற்றமானது பல்வேறு படிமுறைகளூடாக முன்கொண்டுவரப்படுகின்றது. இந்தப் படிமுறைகள் ஆரம்ப காலங்களில் மிக மெதுவாகவும் காலப்போக்கில் வேகமாகவும் தற்போது அதிவேகமாகவும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு கணமும் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள், புதுப்புது வாழ்க்கைப் பாடங்கள். ஒரு காலத்தில் நமது கற்பனையில் கூடக் கண்டிராத பலவேறு விடயங்கள் தற்போது சர்வசாதாரணமாகிவிட்டன. வீட்டிற்குள் இருந்து கதைப்பது போல் தொலைத் தொடர்புகள். இவ்வாறு பல்வேறு கண்டுபிடிப்புக்கள். இவை அனைத்தும் நம்மை அதிசயிக்க வைக்கும் சம்பவங்கள்.

உலகில் இன்று நாம் காணும், பயன்படுத்தும் அத்தனையும் முடிவு பெறாத ஒருமூலப் பொருளாகக் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் அவசியமானது. மூலப்பொருட்கள் மட்டும்தான் படைக்கப்பட்டுள்ளன. அதை முடிவுப் பொருளாக்குவது மனிதனின் செயற்பாடு. உதாரணமாக நெல் மூலப்பொருள். அதைக் கஞ்சியாக்குவது மனிதனின் செயற்பாடு. இவ்வாறு ஒவ்வொரு படைப்பையும் நாம் கூர்ந்து கவனிப்போமாயின் அவையனைத்தும் மூலப்பொருட்களாக மட்டுமே படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக்கும் மனிதனின் திறமை அளப்பரியது. ஏனெனில் ஒரே மூலப்பொருளில் இருந்து பல்வேறு தேவைக்களுக்கேற்ப முடிவுப் பொருட்களை உருவாக்கும் நுண்ணறிவு மனிதனிடம் உண்டு. இரும்பில் இருந்து ஊசியையும் உலகைச் சுற்றும் விமானத்தையும் உருவாக்குகிறான்.

இப்போது இன்னுமொரு விடயத்திற்கு வருவோம். கண்டுபிடிப்புக்கள் இரண்டு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒன்று இருப்பதைக் கண்டு பிடித்தல் (Discovery), மற்றையது புதிதாக ஒன்றை உண்டாக்குதல் (Invention). அடிப்படையில் இந்த இரண்டில் எதுவாக இருந்தாலும் அதற்கான மூலப்பொருள் உலகம் தோன்றியபோதே


KG Master
416.725.5112


உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. இவற்றைக் காலத்துக்கு காலம் கண்டறிவதன் மூலமே மனிதவாழ்வும் மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றது. இந்த மாற்றங்களில் அதி பெரும்பான்மையானவை மனிதனிடம் செல்வாக்குப் பெறுவதற்குக் காரணம் பௌதீக ரீதியான மூலப்பொருட்களும் அவற்றின் முடிவுப் பொருள்களுமாகும்.

மனித வாழ்வியலின் அதிவேகமான மாற்றத்துக்கு அடிப்படையாக அமைவது ஒன்றிலிருந்து பலவற்றை உருவாக்குவதே. வர்த்தகமயப்படுத்தப்பட்ட நவீன உலகில் ஒரு மூலப்பொருளில் இருந்து பல்வேறு முடிவுப் பொருட்களை உருவாக்குவது அவசியமாகிவிட்டது. அத்துடன் அடிப்படை மூலப்பொருட்களின் சேர்க்கையின் மூலம் பல்வேறுவகையான முடிவுப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. இலகுவாகக் கூறுவதாயின் உழுந்திலிருந்து தோசை, வடை, களி, கஞ்சி என்றும் இந்த ஒவ்வொன்றில் இருந்தும் வித்தியாசமான முடிவுப்பொருட்களையும் உருவாக்குகின்றோம்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் மூலப் பொருள்பற்றிய ஆய்வல்ல. இந்த மூலப்பொருட்களைக் கண்டறிந்த மூலகர்த்தாக்கள் பற்றியது. இன்று நாம் மிகவும் சாதாரணமாக அனுபவித்து மகிழ்கின்ற அனைத்தும் இந்த மூலநாயகர்களது வியர்வையாலும், குருதியாலும் பல சந்தர்ப்பங்களில் அவர்களது சொந்த உயிர்களாலும் உலகுக்கு அறியப்படுத்தப்பட்டவை. காலத்திற்கு காலம் மனிதருள் மாணிக்கமாகத் தோன்றி அவர்களால் மட்டுமே அடையாளம் காணப்பட்டு தகர்க்க முடியாத தன்னம்பிக்கை காரணமாகத் தம்மை அதற்காகவே அர்ப்பணித்த அந்த மேதைகளின் வாழ்க்கைதான் இன்று நாம் அனுபவிக்கும் சுகவாழ்வு.

மனிதனது வாழ்வியல் மாற்றங்களுக்கான பங்களிப்பைச் செய்த இந்த மாமேதைகளை நாம் இரண்டு வகைப்படுத்தலாம். ஒருவகையினர் பௌதீக ரீதியான மாற்றங்களுக்கும், மற்றையவர் உளவியல்ரீதியான மாற்றங்களுக்கும் வித்திட்டவர்கள். உலகவரலாற்றை உன்னிப்பாகப் பார்ப்போமாயின் இந்த இருவகையினரும் அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளவர்கள். இவர்கள் அனைவரது பாதையும் மிகவும் கரடுமுரடாகவும், மேடுபள்ளமாகவும், பல சந்தர்ப்பங்களில் மற்றவர்களது பார்வைக்கு ஏளனமாகவும் அமைந்திருந்தது. முடிவை முன்னறியும் முன்னுணர்வின் கூர்மையால் இவர்கள் ஒவ்வொருவரும் வெற்றியாளர்களானவர்கள். ஏனெனில் இவர்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமது நோக்கத்திற்காக, மானுடத்தின் தரமான மாற்றத்திற்காக அர்ப்பணித்தவர்கள். இவர்களின் வெற்றி மானிடத்தின் வெற்றியே அன்றி அவர்களது தனிப்பட்ட வெற்றியல்ல.

விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன் இப்போது விண்வெளிக்குப் போய்வருகின்றான். விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சியால் உலகத்தை விரல் நுனியில் கொண்டு திரிகின்றான். இனிவரும் காலங்களில் இன்னும் எத்தனையோ விடயங்கள் எம்மை வியக்க வைக்கும். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்து விடக்கூடாது. நம்மைப்போன்று விதையில் இருந்து மரமாகி மானிடத்தின் பல்வேறு சுதந்திரத்திற்காகத் தம்மை உரமாக்கிய இந்த உத்தமர்களை நாம் மறந்து விடக்கூடாது. உலக வரலாற்றில் அடிமைகள் எனப்பெயர் சூட்டப்பட்டவர்கள் இன்று சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பதற்குக் காரணம் தம்மை உரமாக்கிய இந்த மரங்கள் தான். ஏனெனில் இந்த மரங்கள் உரமானபோது அந்த உரம் சுதந்திர உரமானதால் அந்த உரத்தில் வளர்கின்ற மரங்களும் சுதந்திர உணர்வுடன் வளரும் மரங்களே.

ஆம் வாசகர்களே! நாம் அனைவரும் சுதந்திர உரத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் மரங்களே. நமக்கு மட்டுமல்ல நமது எதிர்காலச் சந்ததியினரின் சுதந்திரத்திற்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் மரங்கள் தான் நாம். வளர்வோம், மேலும் மேலும் வளர்வோம். சுதந்திரமரங்களாக வளர்வோம். வாழ்வின் எல்லையில் உரமாவோம். சுதந்திர உரமாவோம். அந்த உரத்தைப பயன்படுத்தி புதிய சுதந்திர விருட்சங்கள் (மரங்கள்) உருவாகட்டும். ஏனெனில் சுதந்திரம் ஒரு மூலப்பொருள். அதை முடிவுப் பொருளாக்க வேண்டியது நாமல்லவா!




கனடா தமிழீழச் சங்கம்

நடத்தும் முதலாவது
ஆறு (6) நாள் (சனிக்கிழமைகளில்)

வருமானவரி பயிற்சிப்பட்டறை

இடம்: 1160 Birchmount Road, Unit 1A, Scarblorough, ON M1P 2B8
தொடக்கம்: ஜனவரி 13 - 2007
நேரம்: 9:00 மு.ப. - 11:30மு.ப.

ஆர்வமுடையோர் 12.01.2007ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்
தொடர்புகளுக்கு: 416.757.6043





கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை
Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

Self-Confidence, Self-Image
Self-Discipline, Patience
Obedience, Positive Thinking
Winning Attitude,
Taking Responsibility
Leadership Qualities





# திருக்கேதீச்சரம்

பண்: பழம்பஞ்சுரம்

ஆதிப் பொருளுக் காதியவர் அந்தம் இல்லாச் சோதியவர்
வேதப் பொருளாய் விளங்குபவர் வேறாய் நூறாய்த்
துலங்குபவர்
நாதர் நல்ல திருநாமம் நமச்சி வாய எனச்சொல்லிக்
கேதீச் சரத்தை அடைந்திட்டால் கேடொன் றில்லைக்
கேள்மனமே.

பாதி யானார் மங்கையிடப் பாகங் கொண்ட காரணத்தால்
சோதி யானார் மாலயனார் துர்ய அறிவை இழந்ததினால்
ஏத மில்லார் திருநாமம் நமச்சி வாய எனச்சொல்லிக்
கேதீச் சரத்தை அடைந்திட்டால் கேண்மை எல்லாக்
கோள்களுமே.

சாதி பேதம் பார்க்காதார் சாத்தி ரங்கள் நோக்காதார்
வேத ஞானி பாலாவி வெள்ளிக் கரையில் ஆடுபவர்
நாத நாதர் திருநாமம் நமச்சி வாய எனச்சொல்லி
கேதீச் சரத்தை அடைந்திட்டால் கிள்ளை வாழ்வு கீழாமே.

பூத நாதர் அறிவூறும் போத ஞானி புதிர்ஞானி
கோதில் தொண்டர் குற்றத்தைக் குணமாய்க் கொள்ளும்
குணவாளர்
மாதோட் டத்தார் மாண்புமிகு நாமம் நமச்சி வாயவெனக்
கேதீச் சரத்தை அடைந்திட்டால் கிளரும் புகழும் செல்வமுமே.

ஐந்து கரத்தார் அறுமுகத்தார் ஆகி வந்த பலமுகத்தார்
சிந்து வெளியில் பலவகத்தார் சிந்தை செய்வார் திருமுகத்தார்
நந்தி நாதர் திருநாமம் நமச்சி வாய வெனச்சொல்லி
முந்திக் கேதீச் சரஞ்சென்றால் முடியும் எல்லா வினைகளுமே.

வல்ல நாதர் கல்விகலை வழங்கு நாதர் வணங்குபவர்
தொல்லை தீர்த்துச் சுகஞ்செய்வார் தூது சென்றார் சுந்தரர்க்கு
நல்ல நாதர் திருநாமம் நமச்சி வாய என்றன்பால்
சொல்லிக் கேதீச் சரஞ்சென்றால் தோன்றும் பகைமை
தோற்றிடுமே.

ஆடல் வல்லார் அமரர்களின் அல்லல் முன்னாள் தீர்த்திட்டார்
வாடும் தமிழர் துயர்தீர்த்து வாழ்வைத் தருவார் எனநம்பி
நாடிக் காப்பார் திருநாமம் நமச்சி வாய எனச்சொல்லி
ஈடில் கேதீச் சரஞ்சென்றால் ஈழம் மலர்தல் எளிதாமே.



கடல்நஞ் சுண்ட கண்டத்தார் கதிரொளி ஒத்த வண்ணத்தார்
படைகள் இல்லாத் தனிமன்னர் பத்தர் படைக்குப்
பணிதொண்டர்
நடனம் வல்லார் திருநாமம் நமச்சி வாய எனத்தொண்டர்
புடைசூழ் கேதீச் சரஞ்சென்றால் புவியில் எல்லாம் பெறலாமே.

கங்கை திங்கட் சடையாளர் கழுத்தில் அரவ அணியாளர்
சங்கை ஊதும் தனியாளர் தாவு புலியின் உரியாளர்
நங்கை பாகர் திருநாமம் நமச்சி வாய எனச்சொல்லித்
துங்கக் கேதீச் சரஞ்சென்றால் சொல்லும் விடுதலை பெறலாமே.

ஊரார் கேளார் ஒன்றேனும் உலகும் பின்னால் வாராது
நேராய் ஒருவன் இருக்கின்றான் நெஞ்சில் நாளும்
பெருக்கின்றான்
பேரார் பெருமான் திருநாமம் நமச்சி வாய எனப்பேசிச்
சீரார் கேதீச் சரஞ்சென்றால் திருவா சகத்தேன் உணலாமே.

*ஈழத்தின் பழமையும் பெருமையும் மிகுந்த கோயில்களிலே திருக்கேதீச்சரமும் ஒன்று. வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருக்கும் இவ்வாலயம் இலங்கை அரசனான மகாசேனன்(கி.பி.276 - 303) ஆட்சிக்கு முன்பிருந்தே பெயர்பெற்றிருந்தது. திருஞானசம்பந்தப் பெருமானதும் சுந்தரமூர்த்தி நாயனாரதும் தேவாரங்களைப் பெற்ற சிறப்புடையது. இறைவர்: கேதீசநாதர். இறைவி: கௌரியம்மை.*

**கவிஞர் வி. கந்தவனம்**



# சிட்டுக்களின் செந்தமிழ்பாடல்

பல்லவி:

எட்டி யெட்டியோடி வாழ்ந்து
எம்மொழி மறப்பதா?

அனுபல்லவி:

தட்டித் தட்டி விட்டுஓடித்
தாய்மண்நாம் இழப்பதா?

சரணம்:

பட்டி தொட்டி எங்குமெங்கள்
பைந்தமிழ் ஒலிக்கணும்
முட்டிமோதி யேனு மெங்கள்
முத்தமிழ் சிறக்கணும்

சிட்டுப்போலப் பைந்தமிழில்
சிந்துகள் நாம்பாடணும்
மெட்டுப்போட்டு வித்தகரும்
மெல்லிசையை மீட்டணும்

ஓட்டியோடி ஒழித்தொதுங்கி
மடியுதல் மடமையே
கெட்டியாகக் கைகொடுக்கக்
கிட்டுமெங்கள் ஈழமே

*ஆக்கம் - அருட்கவி: தம்பிஐயா ஞானகணேசன்*

கவிஞர்: கந்தசாமி முத்துராஜாவின் 55 கவிதைகள் அடங்கிய 'சுனாமி' கவிதைத்தொகுப்பு பின்வரும் நிலையங்களில் விற்பனையாகின்றன:
- முருகன் புத்தகசாலை
  மிட்லான்ட் அன் எல்ஸ்மெயர்.
- கலைமகள் புத்தகசாலை
  மார்க்கம் அன் எக்லிங்டன்.




# புலம்பெயர்ந்த பூனை

“ஆபிரிக்க நாடொன்றில் இருந்து வந்த பொதிகள் உள்ள பெட்டியைத் திறந்த பொழுது ஒரு பூனை ஒன்பது நாள் அதனுள்ளே இருந்தபின் வெளியே பாய்ந்தோடியது” இது கனடாத் தினசரிப் பத்திரிகைச் செய்தி. இனிக் கதை

நைஜீரியாவில் வேலை பெற்றுப் போன பலரில் நானும் ஒருவன். கல்வி அமைச்சில் விவசாயப் பாடத்திற்கான பாடசாலைப் பரிசோதகர் பதவி. பவிசான பதவி. இலங்கையில் உழைத்ததிலும் பார்க்கக் குறைவான உழைப்பு, கூடுதலான வேதனம், நிறைய ஓய்வு கிடைத்தது. ஆனால் நேரம் போக்குவதற்குப் பொழுது போக்குக் குறைவு. இந்தியா இலங்கையிலிருந்து பெறும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் தவிர நிறையத் தமிழ், மலையாள வீடியோ திரைப்படங்கள் பார்த்தல், நண்பர்களுடன் அரட்டை என இப்படியாகத் தான் பொழுது போனது.

நாம் நைஜீரியா போன சமயத்தில் அது ஒரு குடியரசாக இருந்தது. எமது மாகாணத்தைச் சார்ந்த ஷேகு சகாரி என்பவரே அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்தார். விரைவில் நிலமை மாறிவிட்டது. ஊழலும் இலஞ்சமும் மலிந்து விட்டது எனக் கூறி அவரை உள்ளே போட்டு விட்டு ஆட்சியைக் கலைத்து இராணுவ ஆட்சி பிரகடனப் படுத்தப் பட்டது. சிறிது காலத்தில் அதே குற்றச் சாட்டில் அவருக்குக் கல்தா கொடுத்தபின் இன்னொரு தளபதி ஆட்சியைப் பிடிதார். ஆனால் எம்மைப் பொறுத்த மட்டிலே எப்போதும் போல ஒரே மாதிரியாகத்தான் காலம் போனது. அதுக்கும் இதுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. ஆனால் வந்தவன் போனவன் எல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு போக அரசாங்கத்தின் கையில் கடித்தது. இராணுவ ஆட்சி திடீரென ஒரு பெரிய மாற்றம் கொண்டு வந்தது. வெளிநாட்டில் இருந்து அங்கு வந்து தொழில் பார்ப்பவர்கள் வெளியே அனுப்பும் பணம் ஆரம்பத்தில் ஊதியத்தில் அரைவாசி என்றிருந்ததை மூன்றில் ஒன்று ஆக்கி விட்டனர். மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. நைஜீரியப் பணமான நையிறாவின் பெறுமானம் கணிசமாகக் குறைந்துவிட இதனால் வெளியே அனுப்பப் படுகின்ற தொகைக்கும் மிகச் சிறிய அந்நிய செலவாணியே கிடைத்தது. நாம் அங்கு போன நோக்கமே சிதறிவிட இரண்டு வகையாலும் பாதிக்கப் பட்டமையால் தான் அந்நாட்டை விட்டு வெளியேற நம்மவர்களில் பலர் முயன்றனர். இங்கே பலர். இங்கிலாந்தில் சிலர். அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் மிகச் சிலர்.

நான் நைஜீரியா போனதும் முதலில் ஒரு பாடசாலையில் விவசாயம் கற்பிக்கும் ஆசிரியராகவே நியமனம் பெற்றேன். ஆட்சி மாற்றம் எனது ராசி மாற்றத்திற்கும் காரணமாயிற்றோ தெரியாது கையுட்டுக்குப் பிர-பலமான அந்த நாட்டிலே எவ்விதமான சிவுசிவுப்பும் இல்லாமல் திடீரென கல்வி அமைச்சின் விளம்பரப் பலகையில் பதவி உயர்வு பெற்றோரின் பெயர்களில் என் பெயரும் இருந்தது. அந்நாட்டிலே ஆட்சி மாற்றம் மாதிரித்தான் பதவி ஏற்றம் இறக்கமும். முதல் நாள் ஒருவருக்கு அதிபர் பதவி உயர்வென அறிவித்தல் வரும் மறு நாள் அவர் சாதாரண ஆசிரியராக எங்கோ ஊர்பேர் தெரியாத மூலைக்கு மாற்றப் பட்டிருப்பார். ஆகவே, எனது நண்பர்கள் பதவி உயர்வு பற்றி என்னிடம் வந்து செய்தி கூறிய பொழுது நான் அதைப் பெரிது படுத்தவில்லை. எனது பாடசாலை அதிபரும் கொஞ்சம் முகம் சுழிக்கவே செய்தார். நான் போவது அவருக்கு அவ்வளவாக ருசிக்கவில்லை. மற்றெல்லாம் போகட்டும், நேரசூசி தயாரிக்க ஒருவரைத் தேடவேண்டுமே. ஆனால் நான் போகாததை அறிந்த கல்வி அமைச்சில் வேலை பார்க்கும் இரு இந்திய நண்பர்கள் என் வீடு தேடி வந்து பிரதம கல்வி அதிகாரி எனது வருகைக்காகக் காத்திருப்பதாகக் கூறினார்கள். எனவே, நான் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சென்றேன் பதவி ஏற்றேன். இதன் பெறுபேறாக அமைச்சகத்துக்கு அண்மையாக ஒரு வீடு தந்தார்கள். அந்த வீடு மிகவும் விசாலமானது. முன்னைநாள் மந்திரி ஒருவருக்குச் சொந்தமானது. அவரை இராணுவ அரசு கராக்கிரகத்தில் அடைத்து விட அவரது தர்ம பத்தினிகளும் அவர்களது வாரிசுகளும் அல்லாடினார்கள். கிராமத்துக்குச் சென்றுவிட்டனர். அவரது வீட்டினது வெளிப்புற குச்சில் (out House) அவரது பிள்ளைகளில் ஒரு சிலர் தங்கி இருந்தனர். நீண்ட காலமாகப் பூட்டி இருந்த இந்த வீட்டினுள் நான் குடி புகுந்தேன்.

பாடசாலைகளிலே ஆசிரியர்களாகக் கடமை ஆற்றுபவர்களுக்கு ஒரு அதிருஷ்டம்



இருக்கும். அவர்களுக்கு ஊதியம் பெறாத வேலைக் காரர்களாகச் சில மாணவர்கள் வந்து ஒண்டிக் கொள்வார்கள். வீடு பெருக்குதல், பாத்திரம் கழுவுதல், உடுப்புகள் துவைத்தல், சந்தைக்குச் செல்லல் என எல்லா வேலைகளையும் அவர்கள் முன்னின்று செய்வார்கள். நாம் சாப்பிட்ட மிகுதி உணவை மாத்திரம் அவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும். இடையிடையே எதாயினும் சில்லறை கொடுத்தால் அவர்களுக்குக் குசியோ குசி. பத்து முறை குனிந்து வளைந்து அல்லாவை அழைத்துச் சலாம் வைப்பார்கள்.

நான் பதவி மாறினாலும் எனது பாசமிகு மாணவ உதவியாளர்கள் மாறவில்லை. நான் வீடு மாறுதற்குப் பெரிதும் உழைத்தனர், துப்புரவாக்கினர். ஒரு நல்ல நாளில் நாம் அங்கே குடி ஏறினோம்.

நான்கு விசாலமான அறைகள். நான் மனைவி இரண்டு பிள்ளைகள். மூத்தவளுக்கு ஆறு வயது, இரண்டாவதற்கு நான்கு வயது. அவர்கள் இருவருக்கும் ஒரு தனி அறை. நமக்கு ஒரு அறை போக இரண்டு மிகுதி.

இரவு நாம் தொலைக்கட்சியில் மலையாளப் படம் ஒன்றில் மூழ்கியிருந்தோம். அவர்கள் மறு அறையில் விளையாடிக் கொண்டிருந்தனர். குய்யோ முறையோ என அலறி அடித்தபடி இருவரும் எமது அறைக்குள் பாய்ந்து வந்து எமது மடியில் வீழ்ந்தனர். படத்தை நிறுத்தி விட்டு என்ன ஏது என விசாரித்தோம். சின்னவள் அழுகையை நிறுத்திய பாடில்லை ஆரோகண அவரோகணத்துடன் தொடர்ந்தாள். பெரியவள் விக்கி விக்கிச் சொன்னாள். விசயம் புரிந்தது. அங்கே சுண்டெலி இராச்சியம் நடக்கிறது எனத் தெரிந்தது. நாங்கள் அங்கு குடிபுகு முன்னர் யாருமே வாசம் செய்யாமையால் சுண்டெலிகள் வீட்டினை ஒப்பந்தம் எடுத்துள்ளன போலும். எவ்வளவு சொல்லியும் அவர்களின் பயம் போனபாடில்லை. சின்னவளும் தனது அறைக்குத் திரும்பும் நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. எமது படம் பார்ப்பக்கும் நீண்ட இடைவேளை விட வேண்டியதாயிற்று. அவர்கள் இருவரும் இனி எமது அறையிலேயே உறக்கம் என்பதும் எழுதப்படாத விதியாகி விட்டது.

மறு நாள் எமது விசுவாசமான மாணவ சேவகன் ஹலிடு நாம் எப்படிப் புது வீட்டில் உள்ளோம் எனப் பார்ப்பதற்காக வந்தான். அவன் எனது இரண்டாவது மகளின் மேல் அதீத பாசம் உடையவன். எமது பிரச்சனையைக் கூறினோம். மௌனமாகக் கேட்டபின் போய்விட்டான். வார இறுதி நாட்கள். ஞாயிறு மாலை வந்தான். பிரச்சினைக்கு ஒரு முடிவுடன். கையில் ஒரு அழகான பூனைக் குட்டி. வெள்ளை நிறத்தில் இடையிடையே கரும் புள்ளிகளுடன் பொசு பொசு எனப் பார்வைக்குப் பஞ்சுப் பொட்டணம் போல அழகாகக் கவர்ச்சியாக இருந்தது. வழமையில் வளர்ப்பு மிருகங்களில் அவ்வளவாக அக்கறை காட்டாத என்னையும், தேவை காரணமாக அக்கறை எடுக்க வைத்துவிட்டது. எனது இரண்டாவது மகள் தேனுவிற்கு அதனைக் கண்டதும் சந்தோசம் என்றால் அத்தனை சந்தோசம்.

ஆகவே உடனடியாகவே அவளது செல்லப் பிராணி அந்தஸ்தை அது பெற்றதில் ஒன்றும் வியப்பில்லை.

“ஸ்னோவி” எனப் பெயரும் சூட்டப்பட்டு எமது இல்லத்தின் இன்றியமையாத ஐந்தாவது உறுப்பினரும் ஆகிவிட்டது. காலை மாலை “நிடோ” மாப்பால் உணவு, ஏனைய நேரங்களில் இந்நாட்டைப்போல பூனைச் சாப்பாடு அங்கே இல்லாமையால் மீன் அல்லது இறைச்சி போட்டுப் பிசைந்த உணவு பூனைக்குச் சாப்பாடு ஆயது. அதற்கு ஊட்டிய பின்னர் தான் தேனு தனது உணவை உட்கொள்வதாக பிரமாணம் எடுத்தே விட்டமையால் பூனைக்குட்டி நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்தது என்ற கூறினால் அது கொஞ்சம் குறைத்துச் சொல்வது போலத் தெரிகிறது. இதன் வருகையை அதன் குரல் வாயிலாக அறிந்த அதன் ஜன்ம விரோதிகள் எமது இல்லத்தின் பக்கம் எட்டிப் பார்ப்பதையே மறந்தமை தெரிந்தது.

தற்செயலாக ஒன்று இரண்டு தெரி யாத்தனமாக வீட்டின் உள்ளே பிரவேசித்து ஸ்னோவியின் பிடியில் அகப்படுவதும் உண்டு. ஸ்னோவி தனது வழக்கமான குரோத உணர்ச்சியுடன் அதனைப் பாய்ந்து கவ்வி விடுவது உண்டு. ஆனால் அதனை சாப்பிடுவதற்கென்ன அது பஞ்சத்தில் அடிபடும் வாழ்க்கையா வாழ்கிறது. எனவே அதனை ஒரு விளையாட்டுப் பொருளாகவே பாவித்து. அது இப்பக்கம் பாய்தால் தான் அப்பக்கம் பாய்ந்து ஒரு அடி தலையில், மறுபக்கம் பாய்ந்தால் அப்பக்கமாகப் பாய்ந்து ஒரு அடிதலையில். சுண்டெலிக்கோ சீவன் போகும் அவஸ்தை. பூனைக்கோ விளையாட்டு. இது நடைபெறும் பொழுது தேனு பாய்ந்து கதிரையிலோ கட்டில் மேலோ ஏறி நின்று விழுந்து விழுந்து இரசிப்பார். பூனையின் செயலை எந்த அளவுக்கு சுண்டெலிகுச் சீவ மரணமோ அந்த அளவுக்கு தேனுவிற்கு உல்லாசக் காட்சி. இறுதியில் சாகடித்ததும் அதனைத் தூக்கிக் கொண்டு ஸ்னோவி சென்றுவிடும்.

ஸ்னோவி, தேனுவின் இணைபிரியாத தோழன் ஆகிவிட்டது. பாடசாலை போகும் வேளை தவிர அவளின் வாழ்க்கை அதனுடன் தான். அவள் அருகே தான் படுக்கையும். ஆனால் இடையிடையே இரவுகளில் ஸ்னோயி கம்பி நீட்டிவிடுவது தேனுவுக்குத் தெரியாது. அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதால். எமக்குத் தெரியும் நமது உறக்கம் குழம்பி விடுவதால். நடுநிசியளவில் வீட்டின் கொல்லைப் புறத்திலே பலத்த குரல் வைத்து அது காதல் லீலைகளில் ஈடுபடுவது எமது உறக்கத்துக்குத் தொல்லையாக இருக்கும். என்ன செய்வது? ஒன்று சுண்டெலி மற்றது தேனு. இரண்டுக்குமே ஸ்னோவி தேவையாகிவிட்டது.

தனது அலுவல் முடிந்ததும் நல்ல பிள்ளையாக அது வந்து தேனுவுக்கு அருகே படுத்து விடும். காலையின் தேனுவின் கண் அதில் தான் முழிக்கும். நைஜீரியாவின் நைறாவின் பெறுமதி பயங்கரமாக விழத் தொடங்கியதும்” அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைகள் போல” நம்மவர்கள் அங்கும் இங்குமாகப் பறக்கத் தொடங்கி விட்டனர். கனடா வந்த நமது நண்பர்கள் இங்குள்ள சலுகைகளைப் பட்டியலிட்டுக் காட்டி வா, வா என்றழைத்தனர். அங்கே உள்ள இந்திய நண்பர்கள் போ, போ என கூறினர். ஆகவே நாம் கனடா புலம் பெயர எல்லா ஆயத்தங்களும் செய்தோம். எமக்கு முட்டுக்கட்டையாக இருந்தது ஸ்னோவிக்கும் தேனுவுக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பு. அதனை அங்கே விட்டு விட்டுப் போவது பிரச்சினை. தேனு அழுதே மாய்ந்து விடுவாள் என்றார் மனைவி. அப்போ என்ன செய்வது அதனைக் கொண்டு போக முடியாதே என்றேன் நான். பலத்த யோசனையின் பின் எனது மனைவி ஒரு தீர்வு சொன்னார், சரி எனப் பட்டது. நாம் புறப்படுவதற்கு முன்னரே தேனுவை ஸ்னோவி இல்லாத வாழ்க்கைக்குப் பழக்கப் படுத்துவதே சிறந்த வழி. எனவே தேனு பாடசாலை சென்றதும் நான் ஸ்னோவியை எடுத்து சில மைல்களுக்கப்பால் உள்ள ஒரு கிராமத்தில் விட்டு விட வேண்டும் என்பது அவரின் ஆணை. செய்து முடித்தேன். தேனு பாடசாலையால் வந்ததும் ஸ்னோவியைத் தேடினா. தேடினா தேடிக்கொண்டே இருந்தா. தேடத்தேட சும்மாவா ஓலம் என்றால் ஓலம் அத்தனை ஓலம். இங்கே தான் எங்கேயாவது போயிருக்கும் என நாம் எவ்வளவு சொல்லியும் உணவை உட்கொள்ள மறுத்துவிட்டா. அழுகையையும் நிறுத்த வில்லை. பரிதாபமாக இருந்தது. நாம் ஒருவருமே உணவு உட்கொள்ளவில்லை.

“மியா” என்ற ஒலி. அது நிஜமா அல்லது வெறும் மனப் பிரேமையா? தேனுதான் பாய்தடித்துக்கொண்டு வெளியே ஓடினாள். ஸ்னோவியை அள்ளி அணைத்தபடி பரவசத்துடன் வந்தாள். அவளுக்கு மகிழ்ச்சி நமக்கோ வியப்பு. இது எப்படி இவ்வளவு தூரம் வந்தது?

## கனக்ஸ்

நாம் நைஜீரியாவை விட்டுப் புறப்பட இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. இந்தப் பூனை விவகாரம் பெரும்பிரச்சினையாக இருந்தது. என்ன செய்யலாம். மீண்டும் மந்திராலோசனை. இந்த முறை இன்னும் கொஞ்சம் தூரத்தில் விட்டு விட்டு வாருங்கள் என்றார் மனைவி. செய்தேன் பாடசாலையிலிருந்து வந்த தேனு பூனையைத் தேட நாம் அது அன்றையைப் போல எங்கோ போய்விட்டது விரைவில் வருமென தேறுதல் கூறினோம். அவளும் பெரிதாகப் பிரச்சினைப் படுத்தவில்லை. சிவனே என நிம்மதி.

எல்லோரும் பெட்டிகள் அடுக்குவதில் மும்முரம். அருகே உள்ள ஒரு நைஜீரியக் குடும்பம் எம்மோடு கொஞ்சம் நெருக்கம். எனவே அவர்களிடம் பயணம் சொல்லி வருவதற்கு நானும் மனைவியும் சென்றிருந்தோம். பிள்ளைகள் இருவரும் வீட்டில் இருந்தனர்.

அன்று இரவும் ஸ்னோவியையைக் காணவில்லை. இனி வராது என்ற நம்பிக்கை. ஆனால் ஆச்சரியம் தேனு. ஒன்றுமே பிரச்சினை கிளப்பாமல் உணவு உட்கொண்டா. உறங்கினா.

மறு நாள் பிரயாணம் ஆரம்பம். சொக்கொற்றோ விமான தளத்தில் விமானம் ஏறி லேகோஸ் போய், அங்கிருந்து ஐபீரியா விமான செவையின் விமானத்தில் ஸ்பெயின் சென்று, அங்கிருந்து நியூயோர்க்கில் வந்து ஒரு நாள் தங்கி, மறுநாள் கனடா வந்து அகதி நிலை கோரி மொன்றியால் வந்து சேர்ந்தோம். மொத்தம் 3 நாள் பிரயாணம். எமது நண்பர் லாம்பேர்ட் எமக்கென உயர் மாடிக் கட்டடத்தில் வதிவிடம் ஒழுங்கு செய்து வைத்திருந்தார். ஆகவே நிம்மதியாக அங்கு காலை வைத்தோம்.

மறு நாள் இரவு. பொதி ஒன்றில் படுக்கை விரிப்புகள், கம்பளி ஆகியன கொண்டு வந்திருந்தோம். இன்னும் வீடு ஒழுங்குக்கு வரவில்லை. ஏதோ மெல்ல மெல்ல நகர்ந்தது. குளிர் என்றமையால் அவை வைத்திருந்த பொதியைத் திறந்து அவற்றினை எடுக்குமாறு மனைவியிடம் சொன்னேன். மனைவி அந்தப் பொதியினை எடுத்து அதன் முன்னாலிருந்து மெல்லத் திறந்தா.“மியா” என்ற சத்தத்துடன் அதனுள் இருந்து பாய்ந்தது ஸ்னோயி. மனைவியோ திகைப்பில் பேயறைந்தது போல் கல்லாய்ச் சமைந்தார். இது எப்படி உள்ளே வந்தது என்றேன் நான். தேனு ஒரு நமட்டுச் சிரிப்புடன் ஸ்னோயியைத் தொடர்ந்து ஓடினாள். புறப்பட முன்னர் தேனுவின் அமைதிக்குக் காரணம் புரிந்தது.

• • •



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 195 December 15, 06

1) The two integers with a sum of -4 and a product of -21 are 3 and -7.
The greater of these two integers 3.

2) In order to calculate speeds we must always consider the distance covered in a certain time. Driving at 30 mph for 1 mile requires 1/30 of an hour or 2 minutes.
To average 60 mph for 2 miles requires 2/60 of an hour or 2 minutes.
The answer is none of these.

3) When x =1, we are told that $a(1)^3 - 2(1) + c = -5$ or a + c = -3 ____(1)
similarly.. when x = 4
$a(4)^3 - 2(4) + c = 52$ or 64 a + c = 60 ------- (2)
Solving equ.(1) and (2) gives a = 1, Substituting a = 1 in eq.(1) gives c = -4.
The original expression ax3 - 2x+c become x3 - 2x - 4. By trial and error, using devisors of 4, when x = 2 we get $2^3 - 2(2) - 4 = 0$. The answer in 2.

5) Compute $Lt_{x>0}$. $(\sec x - 1)/x^2 = 0/0$
L.H. = $Lim_{x>0}$ Sec x. tan x/2x = 0/0
=$Lim_{x>0}$ $(\sec x \tan^2 x + \sec^3 x) / 2 = 1/2$

## Tutorial - 196 January 01, 07

1 A dog and a rabbit are 160 metres apart. The dog chases the rabbit.
For every 9 minutes the dog runs, the rabbit runs 7 metres. Find the distances in, in metres, that the dog must run in order to overtake the rabbit. (For Gr. 8)

2. A t present, the sum of the ages of father and his son is 33 years.
Find the smallest number of years until the father's age is 4 times the son's age.

3. State each function is true or false.
(a) Assume the function f (x) is defined for all x and f'(a) = 0.
Then f (x) must have a maximum or minimum at a.

(b) Assume that f(x) is continuous at all real numbers x.
Then f(x) has an absolute maximum on the interval (0,4).
(c) Assume that f(x) is continuous at all real numbers x.
Then f(x) has an absolute maximum on (0,4)

(d). Assume that f(x) is continuous at all real numbers x.
Then f(x) has a relative minimum value.

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774**


MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from

Gr. 2 ta Gr. 10
Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

CONTACT: 416 - 431- 6774 (Markham & Ellesmere)

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880


# புளூட்டோ

டிசெம்பர் என்பது தமிழர்களுக்கு என்னவோ பொருந்தாத மாதமாகிவிட்டதோ என எண்ணத்தான் தோன்றுகின்றது. இரண்டு வருடங்களின் முன்னர் ஆழிப்பேரலையின் அனர்த்தம். 2006ல் நமது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவின் துயரம். ஆயினும் துன்பங்கள், துயரங்கள் எம்மை ஒருபோதும் உறைந்து போகவைப்பதில்லைத் தானே! இந்நிலையிலும் கூட,

புதுவருட நல் வாழ்த்துகள்! புது வருடம் மனநிறைவைக் கொண்டுவரும் ஆண்டாக அமையட்டும் என இறைவனை இறைஞ்சுவோம்.

